பக்கங்கள் 8

# ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 22 பங்குனி 18 ஜூ-அப் 13 இதழ் 50
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 31-3-80

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1980-4-1
PERIODICALS DIVISION
LIBRARY

## கடலில் மிதப்பதில் உலக சாதனை

]யாழ்ப்பாணம்].
கை, கால்களைச் கட்டிய வண்ணம் கடலில் மிதந்து உலக சாதனையொன்றை நிலை நாட்டும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும். வல்வெட்டித்துறையைச் சேர்ந்த துரைராஜா யோகரத்தினம் (இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை) 53 மணித்தியாலம் கடலில் மிதந்து சாதனை புரிந்து வருகிறார்.

உலக சாதனை முயற்சி

[8-ம்பக்கம் பார்க்க]

# மகாவலி நீர் விரைவில் யாழ்ப்பாணம் திரும்பும்

## மகாவலி அபிவிருத்திச்சபை இயக்குநர் தகவல்

(யாழ்ப்பாணம்)
"மகாவலி நீர் விரைவில் யாழ்ப்பாணத்திற்குத் திசை திருப்பப்படும். அதன் மூலம், வரட்சிமிகுந்த வடபகுதி மேலும் வளமான நாடாகக் காட்சிதரும் அந்தச் சந்தர்ப்பத்தில் வடபகுதியின் அழகை நேரில் பார்வையிட ஆண்டவன் என்னை உயிருடன் வைத்திருக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்"

மகாவலி அபிவிருத்தித்திட்டத்தில் சிரமதானப்பணியை மேற்கொள்ளச்செல்லும் யாழ் மாவட்ட ஐக்கியதேசியக் கட்சி இளைஞர்கள் முன்னிலையில் மகாவலி அபிவிருத்திச் சபை இயக்குநர் திரு. ரஞ்சித் சில்வா பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் யாழ் மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர் திரு. கே. கணேசலிங்கம் தலைமையில் நேற்றுக் காலை நடைபெற்ற கூட்டத்தில் திரு. ரஞ்சித்சில்வா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"இந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்திற்குள்ளாகவே யாழ்ப்பாணத்திற்கு மகாவலி, திசை திருப்பப்படும். இதனை உறுதியாக இங்கு கூறுகின்றேன்.

(8-ம் பக்கம் பார்க்க)

## ஷா நிலைமை: 10 நாளில் வெளியேறுவார்

கெய்ரோ, மார்ச், 30
கல்லீரல் அகற்றப்பட்ட நிலையில் சிகிச்சைபெற்றுவரும் ஈரானிய ஷா இன்னும் 10 நாட்களில் ஆஸ்பத்திரியைவிட்டு வெளியேறலாம் என்று சத்திர சிகிச்சையை மேற்கொண்ட டாக்டர்கள் குழுவின் தலைவர் அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் மைக்கல் டிபாகே தெரிவித்துள்ளார்.

## மணிக்கூட்டுக் கோபுரம்: திருத்தவேலை ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]
மணிக்கூட்டுக்கோபுர வேலைகள், மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

யாழ்ப்பாண மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதனின் தலையீட்டைத் தொடர்ந்து கடந்த ஒருமாத காலமாக தடைப்பட்டிருந்த யாழ்.நகர மணிக்கூட்டுக் கோபுர திருத்த வேலைகள் மறுபரிசீலனை செய்யப்பட்டு, மீண்டும் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது மணிக்கூட்டு

[8-ம் பக்கம் பார்க்க]



## 'செல்வா' நினைவாலயம்: 26-ம் திகதி திறப்புவிழா

[யாழ்ப்பாணம்]
தந்தை செல்வா நினைவாலயத் திறப்புவிழா அடுத்த மாதம் 26-ந் திகதி மாலை ஐந்துமணிக்கு நடைபெறும். இதனைத் தொடர்ந்து பகிரங்கக் கூட்டம் நடைபெறும்.

ஏப்ரல் மாதம் 26, 27, 28 ஆகிய மூன்று தினங்கள் நடைபெறும் இவ்விழாவில் தந்தை செல்வா நினைவுச் சொற்பொழிவுகளும் "சங்கிலியன்" நாடகமும் நடைபெறும்.

## செல்வா நினைவுச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)
இவ்வாண்டுக்கான அமரர் செல்வா அறங்காவல் நினைவு சொற்பொழிவைஏப்ரல்மாதம் 27, 28ம் திகதிகளில் வண. எக்ஸ். எப். தனிநாயகம் அடிகளார் நிகழ்த்துவார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நிகழும்வைபவத்தில் 27ம் திகதி 'தமிழர் பண்பாடும் அதன் சிறப்பு இயல்புகளும்' என்னும் பொருள்பற்றி தமிழிலும், மறுநாள் 'தமிழ்த்துறை ஆராய்ச்சி அதன் வரலாறும் வருங்காலமும்' என்னும் பொருள்பற்றி ஆங்கிலத்திலும் வண. தனிநாயகம் அடிகளார் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

இவரது சொற்பொழிவுகள் புத்தக உருவில் பின்னர் வெளிவருமென்றும் கடந்த ஆண்டு இத்தொடரில் திரு. திவாகர் நிகழ்த்திய சொற்பொழிவு ஏற்கனவே புத்தகமாக வெளிவந்தனவென்றும் கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்

(5-ம் பக்கம் பார்க்க)

## யாழ். மாநகர சபையில் 'செல்வா' பிறந்த நாள்

[யாழ்ப்பாணம்]
அமரர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் 83 வது பிறந்த தின விழா இன்று மாலை யாழ். நகரமண்டபத்தில் யாழ். மேயர் திரு. இராசா விசுவநாதன் தலைமையில் நடைபெறுகிறது.

தந்தை செல்வா நினைவுக் கூட்டத்தில் துணை முதல்வர் திரு. பி. எவ்.சேவியர், வைத்திய கலாநிதி ச. அ. தருமலிங்கம், வண எஸ். சிங்கராயர் அடிகளார், திரு. சி. கதிரவேற்பிள்ளை பா. உ. உறுப்பி. திரு. வெ. யோகேஸ்வரன் பா. உ, திரு. கோவை மகேசன், திரு. ஈழவேந்தன், திரு. வண்ணைஆனந்தன் திரு. எஸ். இறைகுமாரன், திரு. எம். சிவசிதம்பரம் பா. உ, திருமதி அ. அமிர்தலிங்கம், திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. மற்றும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் யாழ் மாநகரசபை உறுப்பினர்கள் உட்பட பலரும் உரைநிகழ்த்துவர். ஜனாப் ற. மு. இமாம் நன்றியுரை கூறுவார். [கொ]

### தெல்லிப்பழையில்

தந்தை செல்வாவின் 83-வது பிறந்தினத்தையொட்டி இன்று காலை எட்டுமணிக்கு தெல்லிப்பழையிலுள்ள தேவா

(8-ம் பக்கம் பார்க்க)

உரும்பராயில்

## மின்னல் தாக்கி ஒருவர் மரணம்!

[யாழ்ப்பாணம்]
உரும்பராயில் மின்னல் இடித் தாக்குதலுக்கு ஒருவர் பலியானார். ஆறுபேர் பாதிக்கப்பட்டனர்.

உரும்பராயைச் சேர்ந்த நாகமுத்து மணியம் என்பவரே மின்னலுக்குப் பலியானவராவார்.

பின்பகல் 12 மணிக்கு மழை பெய்துகொண்டிருந்ததால், இறந்தவரும் மற்றும் சிலரும் அங்குள்ள கள்ளுத் தவறணையில் ஒதுங்கியதாகவும் அப்பொழுதே இச்சம்பவம் நடந்ததாகவும் கூறப்படுகிறது.

சம்பவத்தின்போது தவறணையில் நின்ற 6 பேர் மயக்கமடைந்தனரென்றும் இவர்களுக்கு முதலுதவி அளிக்கப்பட்டதென்றும் கூறப்படுகிறது.

நால்வர் மயக்கம் தெளிந்தனர். மயக்கம் தெளிந்த நிலையில் உரும்பராயைச் சேர்ந்த மு. நவரத்தினம், க. சடையர் ஆகியோர யாழ். பெரியாஸ்பத்திரி புதிய 6ம் வாட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெங்காய விதை

பம்பாய் வெங்காய செய்கையாளர்களுக்கு ஓர் வேண்டுதல். இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்திய அரசால் அத்தாட்சி பெற்ற

பூசா ரெட் ரக வெங்காய விதை

இன்னும் சில தினங்களுள் கிடைக்கும்.
உங்கள் தேவைக்கு முன்னதாகவே பதிவு செய்யுங்கள்.

பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்
107, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(5299)

சங்கரத்தையில் சம்பவம்:

## தேர் தடம் புரண்டது!

### சில்லுக்குள் சிக்கியவர் பலியானார்!

[யாழ்ப்பாணம்]
சங்கரத்தை பத்திரகாளி அம்மன் கோவில் தேர் தடம் புரண்டதால் தேர்ச்சில்லுக்கு முண்டு கொடுக்கும் பணியில் ஈடுபட்ட ஆசாரி பலியானார்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தம்பு தங்கத்துரை (வயது 56) என்பவரே பலியானவராவார்.

மழை பெய்து கொண்டிருந்தபோது நேற்றுக் காலை 10 மணிக்கு தேர் வீதியால் வந்துகொண்டிருந்த சமயம் இச் சம்பவம் நடைபெற்றது.

இச் சம்பவத்தின்போது மற்றும் சிலர் காயமடைந்தனர்.

தேர் சரிந்ததும் பக்தர்கள் நாலா பக்கமும் சிதறி ஓடினர்கள். தேரில் நின்றுகொண்டு வந்த வாலிபர் தேர் சரியும் போது, பாய்ந்து தப்பித்துக் கொண்டதாக கூறப்படுகிறது.

முன்னுக்கு வந்த விநாயகர் தேர் தடம்புரண்டபோதே இவர் தேர் சில்லில் சிக்கி பலியானார் 100 யார் பின்னால் வந்த பத்திரகாளி அம்மன் தேருக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை.

காயமடைந்தவர் உடனடியாக யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார். [ச-வெ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### பயிற்சி

3 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சியும் 3 மாத மின்னியல் டிப்ளோமா பயிற்சியும் 10-04-1980ல் ஆரம்பமாகின்றன. Institute of Engineering Technology, 11/B, Momsac Building, Stanley Road, Jaffna. 5383

வெளிநாடுகளிலும் கப்பல்களிலும் தொழில்கள் பெறுவதற்குப் பயிற்சிகள் வெல்டிங் (Electric & Gas நவீன முறையில் 3 மாதம், வயறிங் (IEE முறைப்படி) 3 மாதம் P M G (Radio Officers Course) -6 மாதம், Building Construction & Draughtsmanship Transistor Techrology முதலிய பல பயிற்சிகள். எல்லா விபரங்களையும் தரும் இலவச கையேட்டிற்கு உடன் விண்ணப்பிக்கவும். தேசிய தொழிற்பயிற்சி நிறுவனம் (National Institute of Engineering Technology) 57, 59, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 5305

### விற்பனைக்கு

புதிய கார் றேடியோ National Panasonic கசட் - ஸ்ரீரியோ C Q - 6350 E N W F M ஏரியல் ஸ்பீக்கர் E A B-905 N. பிலிப்ஸ் பொக்கட் றேடியோக்கள் M W ந. சபாரெட்ணம் 180, கண்டி வீதி, அரியாலை. 5343

முற்றிலும் புதிதாக சீரமைக்கப்பட்ட 25 ஸ்ரீ 8000 தொடர்பிலக்க மஸீ பெர்குசன் ரக்ரர், கலப்பை பெட்டியுடன் உடன் விற்பனைக்குண்டு. 410, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (5352)

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற மருதன் கந்தன், பிறவுண் வீதி, கொக்குவில். என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில்.

மரணமெய்தியவர் சோமசுந்தரம் சிவராசா, பிறவுண் வீதி, கொக்குவில்.

மனுதார்

மரணசாதனநியாயாதிக்கம் இல. தத்துவம்/3416

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம்ஆண்டு சித்திரைமாதம் 11-ஆந்நாளன்று முற்பகல்9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர்தோன்றிஅவ்வாறுபதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி.
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்

1980-ம் ஆண்டு பங்குனி மாதம் 28-ம் நாளாகிய இன்று திகதயிடப்பட்டது (53.7,

## தொழில் நுட்பப் பயிற்சி பெற்று திரும்பினர்

(விசுவமடு)

விசுவமடு 'றெட்பாணு' கைத்தொழில் பேட்டையின் நிர்வாக அதிபர் திரு. ஏ. ஜீ. எஸ். பாலசந்திரன் ஒரு மாத கால இந்திய தொழில் நுட்ப பயிற்சியை முடித்துக்கொண்டு இலங்கை திரும்பியுள்ளார். இவர் இந்தியாவிலுள்ள சிறு கைத்தொழில் நுட்பங்களைப் பற்றி அறிவதற்காக நோர்வே ஸ்தாபனமான 'றெட்பாணு' வின் சார்பில் சென்றிருந்தார்.

## இன்றைய பலன்

பங்குனி மாதம் 18-ம்திகதி (31-3-80) திங்கட்கிழமை

மேடம்: தொல்லைகள் அலைமோதும் மனநிம்மதியை தேடி அலைவீர்கள் வைத்தியச் செலவுகளும் இடம்பெறலாம்.

இடபம்: உழைப்பினால் உயர்ச்சியுண்டு. உயர்கல்வி நாட்டமுண்டு. பரோபகாரச் சிந்தையும் மேலிடும்.

மிதுனம்: அருளும், பொருளும் இன்று இணைந்து கிடைக்கும். தொழில் மாற்றம் ஏற்படலாம். குடும்பத்திலும் விருத்திகாணப்படும்.

கடகம்: தெளிந்தமனதுடன் செயலாற்றுவீர்கள். பணவிவகாரம் திருப்தியளிக்கும் சகோதரசுகமும் உண்டு.

சிங்கம்: நிதியில் முடக்கம் ஏற்படும். வீண்பழிக்கும் இலக்காகுவீர்கள். எவ்விடயத்திலும் ஆலோசனை விரும்பத்தக்கது.

கன்னி; உடன்பிறந்தவர்களாலேயே தொல்லைகள் உருவாகும். துஷ்டர்கள் உறவு துயரத்தில் ஆழ்த்தும். திடீர் முடிவை தவிர்.

துலாம்: எழுத்தாளர்க்கு எழுச்சிமிக்கதினம், புதிய படைப்புக்கான கருவூலம் கிடைக்கலாம். குடும்ப வாழ்வில் சுமுகமானநிலை உருவாகும்.

விருச்சிகம்: சிந்தனை அலைகள் சீறிப்பாயும்; போட்டிவிவகாரங்களை தவிர்க்கவும் பொறுமையுடன் செயலாற்றவும்.

தனுசு: நீண்டநாள் தடை இன்று விலகும். வாழ்வுப்பயணமும் தொடரும். முன்னேற்றப்பாதையிலும் வீறுநடை போடுவீர்கள்.

மகரம்: அந்தஸ்து உயர்வதற்கிடமுண்டு. பிள்ளையின் முன்னேற்றம் பெருமைதேடித் தரும். சிறப்பான வாழ்வும் உண்டு.

கும்பம்: ஏமாந்த நேரத்தில் உங்களை வீழ்த்திவிடுவதற்கு சிலர் முனைவர். அன்னியவாசமும் ஏற்படலாம். பின்னணியில் பிளவுக்குமிடமுண்டு.

மீனம்: சுற்றுடலில் மகிழ்ச்சி உண்டு. காதலர்களுக்கு கனிவான தினம் எதிர்ப்புக்கள் மறைவதற்குமிடமுண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை
க.வேலுப்பிள்ளை

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## பொம்மைவெளியில் ரூ. 50 லட்சம்செலவில் தொடர்மாடி வீடுகள்

### யோகேஸின் கோரிக்கைக்கு அங்கீகாரம்

(யாழ்ப்பாணம்)

பொம்மைவெளிக் குடியேற்றத்திட்டத்தில் 50 லட்ச ரூபா செலவில் 100 வீடுகளைக் கொண்ட பாரிய தொடர்மாடி குடியிருப்பு மனைகளை அமைப்பதற்கு வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சரும், பிரதம மந்திரியுமான திரு. ஆர். பிரேமதாஸா அனுமதி வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள முஸ்லிம் சமூகத்தினருக்கு தனியான, வீடமைப்புத் திட்டமொன்றை அமைத்துக்கொடுக்குமாறு, யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், திரு. ஆர். பிரேமதாஸாவைக் கேட்டுக்கொண்டதற்கமையவே இத்திட்டத்திற்கு இப்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த தேசிய வீடமைப்பு, அதிகார சபை உயர் அதிகாரிகள், இத்திட்டம் அமையவிருக்கும் காணியை நேரில் பார்வையிட்டுச் சென்றுள்ளனர் இக்காணி பொம்மைவெளியில் உள்ள போராசமூகத்தின், புதைகுளி காணிக்கு அண்மையிலுள்ளது.

இரண்டு கட்டங்களாக நிறைவேற்றப்படும் இத்திட்டத்திற்கான அடிக்கல் விரைவில் நாட்டப்படும்.

இதற்கான ஏற்பாடுகளை யாழ் வீடமைப்பு உதவி ஆணையாளர் திரு. பி. இராமநாதன் மேற்கொண்டுவருகிறார்.

(கெ-இ)

## திருவிழா

(உடுப்பிட்டி)

கரவெட்டி சாமியன் அரசடி ஞான வைரவர் ஆலய வருடாந்தத் திருவிழா அடுத்த மாதம் 4ம் திகதி கொண்டாடப்படவுள்ளது. அன்று மதிய அன்னதானத்துடன் ஆரம்பமாகும். இவ்விழா இரவுநடைபெறும் கலை நிகழ்ச்சிகளுடன் நிறைவுபெறும்.

## ஆலங்கேணியில் நாவலர்விழா

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த ஆலங்கேணியில் அடுத்த மாதம் 6 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாவலர் விழா கொண்டாடப்படவிருக்கின்றது.

இந்த விழா ஆலங்கேணி இந்து இளைஞர் மன்றத்தினரால் கொண்டாடப்படுகின்றது. (வேல. நி-அ)

## பாடசாலையிலிருந்து விலக்கப்பட்ட 28 மாணவர்களும் மீண்டும் சேர்க்கப்பட்டனர்

(நெல்லியடி)

புலோலி புட்டளை மகாவித்தியாலயத்திலிருந்து விலக்கப்பட்ட மாணவர்கள் 28 பேரும் மீண்டும் பாடசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

தலைமை ஆசிரியர் இம்மாணவர்களை விலக்கியது நியாயமற்றதென சனசமூக நிலையத்தினர், சைவ அபிவிருத்திக் கழகம் என்பன யாழ். கல்வித் திணைக்களத்திற்கு புகார் செய்திருந்ததுடன் விசாரணை நடைபெறவேண்டுமெனவும் கோரியிருந்தனர்.

யாழ். கல்வித் திணைக்கள கல்வி அதிகாரி திரு. சிவபாதம் முன்னிலையில் நடைபெற்ற விசாரணையில் புகாரிட்டவர்களும், தலைமை ஆசிரியரும் தத்தம் கருத்துக்களைக் கூறியிருந்தனர். இறுதியாகப் பாடசாலையிலிருந்து வெளியேற்றப்பட்ட மாணவர்கள் அனைவரையும் மீண்டும் பாடசாலையில் அனுமதிப்பதென முடிவாகியது.

## "கிராமம்தோறும் தொழிற்பயிற்சி: வசதிகள் பயன் படுத்த வேண்டும்

(புலோலி)

"வேலையற்றிருக்கும் இளம் பெண்கள் தையற்கலை போன்ற பயிற்சி நெறிகளை பயில்வதன் மூலம் சுயமாகத் தொழில் புரிய வாய்ப்பேற்படுவதுடன் போதிய வருமானத்தையும் பெற்றுக் கொள்ள முடியும். இதனைக் கருத்திற்கொண்டே கிராமங்கள் தோறும் இளம் பெண்களுக்கான தொழிற்பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன."

மேற்கண்டவாறு புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்றத்தின் பொருட்காட்சியையும் மலிவு விற்பனையையும் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்து உரையாற்றிய வடமராட்சி வடக்கு கிழக்கு பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் குறிப்பிட்டார்.

திரு. குமாரவேல் தலைமையில், நடைபெற்ற இவ்விழாவில் தொடர்ந்து உரையாற்றிய உதவி அரசாங்க அதிபர் குறிப்பிட்டதாவது:

"பெண்களுக்குத் தொழில் வாய்ப்புகள் அருகிவரும் இவ்வேளையில் படித்துவிட்டு வேலையற்றிருக்கும் இளம் பெண்கள் தையற் பயிற்சி நெறியை மேற்கொண்டு உள்நாட்டிற்குத் தேவையான உடைகளைச் சிறந்த முறையில் தயாரித்து வெளிநாடுகளில் இருந்து வரும் உடைகளுடன் போட்டி போட்டு விற்பனை செய்யக் கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இளம் பெண்களைத் தையற் பயிற்சிகளில் சிறப்பாக ஈடுபடுத்தி உள்ளூருக்குத் தேவையான உடைகளைத் தயாரித்துக்கொள்வதற்கான இயந்திரங்களையும், தொழில் முதலையும் அரசாங்கமும் வசதி படைத்தவர்களும வழங்கி அவர்களுக்கு உதவி செய்ய முன்வரவேண்டும். இம்மன்றத்திற்கு அரசாங்கமும், தத்துவக் கணக்காளர் திரு. சோமசுந்தரம்பிள்ளையும் ஒரு தையல் மெஷின்களை வழங்கியுள்ளனர். இது இப்பகுதியில் தையற் பயிற்சியினை மேற்கொள்ளும் இளம் பெண்களுக்கு பேருதவியாக இருக்கும் மேலும் வசதியடைந்தோர்கள் இதுபோன்ற உதவிகளைச் செய்ய பின் நிற்கக் கூடாது.

தத்துவக் கணக்காளர் திரு. சோமசுந்தரம்பிள்ளை, மன்றச் செயலாளர் திரு. க. நடனசபாபதி ஆகியோரும் உரையாற்றியதையடுத்து செல்வி யோசரஞ்சிதம் நன்றியுரை தெரிவித்துப் பேசினார்.

## யாழ். தொகுதியில் 20 வீடுகளும் கையளிக்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தொகுதியில் கட்டிமுடிக்கப்பட்ட 20 வீடுகளும், கடந்த வியாழக்கிழமை வீடற்றவர்களுக்கு வழங்கப்பட்டன.

வீடமைப்புநிர்மாணத்துறை அமைச்சரும், பிரதம மந்திரியுமான திரு. ஆர். பிரேமதாஸாவின் பணிப்புரையின் பேரில், இவ்வீடுகள் உடனடியாக வழங்கப்பட்டது.

கொழும்புத்துறையில் 10 வீடுகளும் நாவாந்துறையில் 10 வீடுகளுமாக இந்த 20 வீடுகளையும் கட்டிட நிர்மாணத் திணைக்களம் 100 நாட்களில் கட்டி முடித்துச் சாதனையொன்றை நிலைநாட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

(கெ-இ)

## கிருமிநாசினியைப் பரீட்சித்த இளைஞர் பலி!

(மாவிட்டபுரம்)

கிருமி நாசினியைப் பரீட்சித்துப் பார்த்த 17வயது இளைஞர் ஒருவர் அதற்கே பலியான பரிதாப சம்பவம் ஒன்று இளவாலையில் இடம்பெற்றுள்ளது.

இளவாலையைச் சேர்ந்த எஸ். வைத்தியநாதன் என்பவரது வீட்டில் உதவியாளராக இருந்த மலைநாட்டைச் சேர்ந்த வேலு முத்துலிங்கம் என்னும் இளைஞரே இவ்வாறு மரணமானவராவார்

இம்மரணம் குறித்து திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா விசாரணை நடத்தினார்.

சம்பவ தினம் தோட்டத்திற்குச் சென்றகாலமானவர் அங்கிருந்த கிருமிநாசினியை எடுத்துப் பரீட்சித்துப் பார்த்ததாகவும், அப்போது அவர் சிறிதளவு கிருமிநாசினியை உட்கொண்டதாகவும் அதையடுத்து தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது அங்கு மரணமடைந்ததாகவும் சாட்சியங்களிலிருந்து தெரிய வந்தது.

தவறுதலாகக் கிருமி நாசினி அருந்தியதால் ஏற்பட்ட விபத்து மரணம் என தீர்ப்பளிக்கப்பட்டது.

சங்கானைப் பொலிசார் விசாரணைக்கான ஏற்பாட்டைச் செய்திருந்தனர். (இ)

## மணமகன் தேவை

வேளாளகுலத்தைச் சேர்ந்த சைவசமய கணக்கியல் பயிற்சி பெற்ற 41 வயதுடைய ஆசிரியையான பெண்ணிற்கு மணமகன் தேவை. பெண்ணிற்கு வேறு பொறுப்பில்லை. திருப்திகரமான சீதனமுண்டு. குறிப்பு இதர விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

Mrs. S. Sethupathy.
48/1, First Lane,
Point pedro Road,
Jaffna.

(5351)

## புதிய தலைவர்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கத்தின் புதிய தலைவராக த. வி. கூட்டணியைச் சேர்ந்த திரு. நா. சிவராசசிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் நயினாதீவைச் சேர்ந்தவராவார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

தான் செய்த ஒரு பாவத்தைப் பிறர் யாரும் அறியாதிருக்கவும், தான் அதைச் செய்துவிட்டேனென்று உண்மையான நாணத்தோடு மறைக்காது எடுத்துக்கூறிவிடுமொருவனைப் பிறர்முன் ஒருவராலும் நாணச்செய்ய முடியாது.

—மகாத்மாகாந்தி

## மக்கள் கருத்து

### வ. போ. ச. நடவடிக்கை எடுக்குமா?

யாழ் — மானிப்பாய் வீதியில் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேற்குவீதியில் இருந்த பஸ் நிறுத்தும் இடம் அண்மையில் நீக்கப்பட்டுவிட்டது இதனால் இப்பகுதிக்கு வரும் பிரயாணிகள் படும் கஷ்டம் சொல்லுந்தரமன்று.

வலிகாமம் மேற்குப் பகுதியிலிருந்துவரும் பிரயாணிகளுக்கே இக்கஷ்டம்.

கடந்த வாரம் இரண்டு நாட்கள் பெய்த மழையின் போதே இப்பிரயாணிகளின் கஷ்டத்தைப் பார்க்கக்கூடியதாக இருந்தது.

ஐந்து சந்தியிலும் வின்சர் சந்தியிலும் பஸ்தரிப்பு நிலையங்களில் பஸ்களிலிருந்து இறங்கிய மேற்குறிப்பிட்ட இடத்திற்குச் செல்லவேண்டிய பல பிரயாணிகள் மழைக்கு ஒதுங்கக்கூட இடமின்றி அவதிப் பட்டார்கள்.

வெயில் காலங்களில் என்றால் பரவாயில்லை. மழைக் காலங்களில் இந்தப் பிரயாணிகளுக்கு ஏற்படும் அவதி தவிர்க்க முடியாததொன்றாகும்.

எனவே இந்நிலையை உணர்ந்து முன்னர் இருந்தது போல் அந்த பஸ்தரிப்பு நிலையத்தை மீண்டும் திறக்க வடபிராந்திய போக்குவரத்துச் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கே. ரவீந்திரன்
சண்டிலிப்பாய்.

## தவக்கால நற்சிந்தனை



"தந்தையே அவர்களை மன்னியும்" (லூக். 23—34)

இயேசுவின் கரங்களிலும், பாதங்களிலும் ஆணிகள் அறைந்தாகிவிட்டது. சிலுவையை உயர்த்தி நிறுத்துகிறார்கள். இதனால் இயேசு அகோர வேதனைப்பட்டார். அவரது காயங்களிலிருந்து இரத்தம்வடிகிறது. அவரைப் பரிகசிக்கிறார்கள் சேவகர்கள். அவரது உடைகளை பங்கிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இயேசு இவர்களை நோக்குகிறார். தாம் பட்ட கொடிய வேதனையையும், தமக்கு இழைக்கப்பட்ட அநீதியையும் ஏதாவது சொல்லப் போகிறாரா?? இல்லை.

"தந்தையே இவர்களை மன்னியும், தாங்கள் செய்வது இன்னதென்று இவர்கள் அறியாது இருக்கிறார்கள்" என இயேசு மன்றாடுகிறார். இறுதிக் கட்டத்திலும், இவ்வேதனை வேளையிலும், அவர் சிலுவையில் தொங்கிய பொழுதும் மொழிந்தவார்த்தைகள் அருள் மொழிகளாக, அமுத வார்த்தைகளாக விளங்கின. இயேசு தம்மைப்பற்றியல்ல, நம்மைப் பற்றியும், நமக்கு வரவிருக்கும் துன்பத்தையுமே அவர் நினைக்கிறார்.

சிறு விடயங்களில் முதலாய் ஒருவர் என்னை அநியாயமாய் நடத்தும் பொழுது உடனே நான் பழிவாங்கவே நினைக்கிறேன். இயேசுவுக்கும் எனக்கும் எவ்வளவு வித்தியாசம்? தீமைக்குப்பதில் நன்மை செய்திருக்கிறேனா! தீமைக்குப் பதில் தீமைசெய்யக் கூடுமாயிருந்தும் செய்யாமல் விட்டிருக்கிறேனா?

இயேசு செய்தது போல் நானும் இனி மன்னிப்பேன். தீமைக்குப் பதில் [illegible] வேன்.

—வணமேரி [illegible] அடிகள்

இன்று மூதறிஞர் செல்வா பிறந்ததினம்

# மாற்றுக் கொள்கையினரும் போற்றிப் புகழ்ந்த 'செல்வா'

**ஈழவேந்தன்**
தலைவர், தமிழர் விடுதலைக்கூட்டணிக் கொழும்புக்கிளை

இன்று தந்தை செல்வா உயிருடன் எம்மிடையே வாழ்ந்திருப்பின் அவருடைய 83-வது ஆண்டு நிறைவு விழாவினை சீரோடும் சிறப்போடும் செந்தமிழினம் கொண்டாடி யிருக்கும். இப்பிறந்த நாள்விழா ஈழத்தின் எல்லையையும் தாண்டி இந்தியத் துணைக்கண்டத்தையும் ஆட்கொண்டு தமிழ்கூறும் நல்லுலகம் அனைத்தையும் தழுவி நின்று இருக்கும். ஆனால் நாம் என் செய்வது? தமிழினம் இதற்குக் கொடுத்து வைக்கவில்லை. இறைவனின் தீர்ப்பு வேறு முறையில் அமைந்துவிட்டது.

தந்தை செல்வா தனது எண்பதாவது அகவையை எட்டிப்பார்க்கும் வேளையில் "நீ வாழ்ந்து ஆற்றிய பணி போதும் இனி நீ ஓய்வெடுக்க வேண்டும் நீ உருவாக்கி ஆளாக்கிய இளம் தலைமுறை தமிழினத்தைக் வழிநடத்தித் தமிழீழத்தைக் காணட்டும் நீ என்னிடம் வா என் அரவணைப்பில் வாழ் என ஆண்டவன் இட்ட கட்டளையை நிறைவேற்றும் முறையில் எம்மைப் பிரிய மனமில்லாத நிலையில் எம்மைப் பிரிந்து சென்றுவிட்டார் தந்தை.

பகைவர் புகழ்ந்த ஆண்மையை' அவர் பெற்றிருந்தார். ஒரு தலைவனை அவர் சார்ந்த இயக்கத்தவர் போற்றிப் புகழ்வது இயல்பு. ஆனால் மாறுபட்ட கொள்கையுடையோரும் மாற்றுக் கட்சியிலிருப்போரும் ஒருதலைவனைப் போற்றிப் புகழ்ந்தாரென்றால் அவர் சாதாரண மனிதனாக இருக்கமுடியாது. நாம் அறிந்தவரையில் இந்தியத் துணைக் கண்டத்திலும இலங்கையிலும் இப்பெரு நிலையைப் பெற்றிருந்தவர்கள் மாநிலத்தை வாழ்வித்த மகாத்மாவும் அறிஞர் அண்ணாவும் தந்தை செல்வாவும் என்று கூறின்அவை மிகைக்கூற்றல்ல.

## ஆவது அறிந்த அறிஞர்

தமிழினம் காலத்திற்குக் காலம் பல தலைவர்களைப் பெற்றளித்துள்ளது. தமிழினம் தோற்றுவித்துள்ள மூளை வளம் படைத்த தலைவர் கட்கும் குறைவில்லை. ஆனால் அந்த மூளை தனக்கா அல்லது தனது சமுகத்திற்காக [illegible]டது என்பது தான் கேள்வி.

## விவிலியம் விளம்பியபடி வாழ்ந்தவர்

தந்தை செல்வா என்றுமே சொல்லின் செல்வராக விளங்கியதில்லை. சொல்லழகிலே அவர் என்றும் கவனம் செலுத்தியதற்குச் சான்றில்லை தான் சொல்லுகின்ற சொல் எந்தப் பொருளை உணர்த்துகின்றது. அது எவ்வளவு தூரம் மக்கள் மனதில் பதியும் என்பதில் தான் அவர் மிக்க கவனம் செலுத்தினர். அவர் நல்ல கிறிஸ்துவராக வாழ்ந்ததனால் விவிலியம் அவரை ஆட்கொண்ட நூலாகவிளங்கியது. விவிலியத்தில் கையாளப்படும் எளிய இனிய உள்ளம் தொடும் சொற்கள் அவர் உள்ளத்தில் இயல்பாக எழ அவர் உதடும் அவற்றையே உச்சரித்தன. அவருடைய ஆங்கில உரையாடலிலும் தமிழ் உரையாடலிலும் விவிலியத்தில் கையாளப்பட்டிருக்கும் மேற்கோள்களும் சொற்களும் இயல்பாக இடம் பெற்றன. "நம்பிக்கை மலைகளையே அசைக்கும் விசுவாசமுள்ளவனாய் இருக்க வேண்டும். தூர நோக்கு வேண்டும். தூய வாழ்வு வாழவேண்டும்" போன்ற சொற்களை அவர் அடிக்கடி உச்சரிப்பதுண்டு அவர் வாழ்வில் என்றும் கோபித்ததில்லையென்று நாம் கூறவில்லை. ஆனால் அவர் கோபித்தது மிகமிகக் குறைவு அவரின் கோபத்தைத் தூண்டும் முறையில் அவரின் தனிப்பட்ட வாழ்விலும் அரசியல் வாழ்விலும் நிகழ்ச்சிகள் பல இடம்பெற்ற போதிலும் தனக்குரிய தனிப்புன்முறுவலுடன் அந்நிகழ்ச்சிகளை அவர் தாங்கிக் கொண்ட தன்மை இன்றும் எம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. மாற்றாரும் மதித்துப் போற்றுகின்ற அளவிற்கு புறநானூறு புகன்ற "அரம் போலும் கூர்மையரேனும் மரம் போல்வர் மக்கட் பண்பில்லாதவர்" என்ற வள்ளுவர் கூற்றிற்கமைய மக்கட் சமுதாயத்திற்குப் பயன்படாத அரம் போன்ற கூர்மையுடன் மரம் போல் வாழ்ந்த தலைவர்கள் பலர். ஆனால் தாம் பெற்ற அறிவை தனது சமுதாயத்திற்குப் பயன்படுத்தியவர்கள் மிகமிகச் சிலரே ஆவர். அந்தச் சிலருள் நம் தந்தை செல்வா ஒருவர். அவருடைய மதி வளத்திற்கேற்ற முறையில் இதய வளமும் அவரிடம் இருந்தது. அவருடைய அன்பு எம்மை அரவணைத்தது. அவருடைய அறிவு எமக்கு ஒளியூட்டியது. "அறிவுடையார் ஆவது அறிவார்" என்ற வான் மறைக்கு ஏற்ப ஆவதை அறிந்து பணிபுரிந்தவர் நம்தந்தை செல்வா முன்கூட்டி உணர்ந்த மூதறிஞர் தீர்க்க தரிசி என்றெல்லாம் தமிழினம் அவருக்குச் சூட்டிய பெயர்கள் வெறும் அடைமொழிகளல்ல. அவை ஆழ்ந்தபொருளின் உள்ளடக்கமாகும். தமிழினம் தன்னைமறந்துவாழ்ந்த காலத்தில் - விடுதலைஉணர்வு கெட்டு வீழ்ந்துகிடந்த நிலையில் "ஏ" தமிழினமே உன் நிலையை எண்ணிப்பார். உன்னைச் சூழ்ந்துள்ள ஆபத்துக்களையும், உன்னைச் சூழ்ந்து வரப்போகும் ஆபத்துக்களையும் எண்ணிச் செயற்படு" என்று கூறும் முறையில் தமிழினம் கனவிலும் எதிர் பார்க்காத பேரின்னல்களையெல்லாம் அடுக்கி அடுக்கிச் சொன்னவர் நம் தந்தையவர்கள். அப்பொழுதெல்லாம் அவரைஒரு 'புலம்பல் தீர்க்கதரிசி' யென்றும் தேவையற்ற கனவுகளைக் காணும் ஒரு வேண்டாத பேர்வழியென்றும் தமிழினத்தின் ஒருபகுதியினர் - எள்ளிநகையாடியதுண்டு. இந்தஎள்ளிநகையாடலை ஏற்று மகிழ்ந்தோரும்பலர். ஆனால் காலப்போக்கில் நாட்டில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் இதோ ஒரு தீர்க்க தரிசி என்று மக்கள் வாய்வீட்டுக்கூறும் அளவிற்கு அவர் எச்சரித்த அபாயங்கள் அனைத்தும் அடுத்தடுத்து நிகழத் [illegible] மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டபோது,

'இன்று அவருடைய கருத்து அடிபடுகின்றது. நாளை நமக்கும் இதே கதிதான் என இயம்பியவர் நம் தந்தை. இன்று கிழக்கு மாகாணத்தில் இரண்டாயிரம் சதுரமைல்களுக்கும் அதிகமான நிலப்பரப்பு பறிபோக இரண்டுலட்சத்துக்கு மேற்பட்ட சிங்களமக்கள் குடியேற்றப்பட்டிருக்க, இரண்டு சிங்களத் தொகுதிகளும் உருவாகிய நிலையில், தமிழ் மண் பறிபோகிறதே? தமிழன் வாழ்வு அழிகிறதே என்று அங்கலாய்க்கின்ற நாம் அன்று இவ்வாபத்தை நம் தந்தை இடித்துரைத்தபோது அதனை ஒரு பித்தரின் பிதற்றல் என நாம்புறக் கணித்த செயலை எண்ணிப் பார்க்கையில் நம் நெஞ்சம் வேதனையால் விம்முகின்றது 1956-ல் சிங்களம்பட்டும் சட்டம் வந்தபோது இது வெறும் மொழித்திணிப்புஅல்ல இது வேறு பல திணிப்புகளுக்கும் இடம் அளிக்கும் என்று எச்சரித்தார். 'இன்று எம் மொழி பறிபோகின்றது, நாளை எம் தொழிலும் பறிபோகும்" என்று எச்சரித்தார். மொழியில் சமத்துவம் தராத அரசு சிங்களம்படிப்பதனால் தொழிலில் சமத்துவம்தரும் என்று எண்ணுவது மடமையென எச்சரித்தார். இன்று அரசதுறையிலும், அரசசார்புடையதுறைகளிலும் தொழில்வகிக்கும் தமிழர்களின் எண்ணிக்கை 70 வீதம் 60 வீதம் என்ற நிலையிலிருந்து 10 வீதம் 5 வீதம் என்று சரிந்துசெல்கின்ற காட்சியைப் பார்க்கும்போது கழுதைதேய்ந்து கட்டெறும்பு ஆன கதை நினைவிற்கு வருகிறது. இவையெல்லாம் தந்தையின் முன்கூட்டிய உணர்வுக்கு தலைசிறந்த எடுத்துக்காட்டுகளாக அல்லவா அமைகின்றன,

## நம்மைநாம் ஆள்வதில்தான் நமக்குவாழ்வு உண்டு என்றார்

ஒன்றுக்குமேற்பட்ட இனங்கள் வாழ்கின்ற ஒரு நாட்டில் ஒற்றையாட்சி தொடரின் அது ஓர் இனத்தின் வாழ்விற்கும் மற்றையஇனங்களின் வீழ்ச்சிக்குமே வழிவகுக்கும் என்று உணர்ந்த நம் தந்தை செல்வா இந்த நிலைமையை மாற்றியமைக்கின்ற முறையில் சிங்கள இனமும் செந்தமிழ் இனமும் தம்மிடையே முட்டிமோதாத நிலையில் ஒவ்வொரு இனமும் தமது தனித்துவத்தைப்பேணிக் கொண்டு அதேவேளை ஒற்றுமையாக வாழ ஒரேவழிஇணைப்பாட்சி தத்துவமே என இருபத்தைந்து ஆண்டுகளாக தனக்கே உரிய உள்ளம்தொடும் சொற்களில் உண்மையை எடுத்துரைத்தார். ஆனால் எம்மை ஆளுகின்ற இனமோ அவர்கூற்றிற்குச் செவிமடுக்க மறுத்தநிலையில் இனியும் இந்நிலைதொடரின் எம்மினம்பூண்டோடு அழிவதைத் தடுக்க முடியாது என்பதை உணர்ந்த நிலையில் ஆளும் இனமாகச் சிங்கள இனமும் ஆளப்படும் இனமாகத் தமிழினமும் தொடர்ந்துவாழின் கொடியுரிமை, குடியுரிமை, வாக்குரிமை, நிலஉரிமை, மொழியுரிமை, தொழிலுரிமை, படிப்புரிமை போன்ற உரிமைகள் அனைத்தையும் இழந்து இனிமேல் தமிழன் மூச்சுவிடுவதும் குற்றம் என்ற நிலைக்கு நம்மினம் ஆளாவது உறுதி என்பதை உணர்ந்து தமிழன்இந்த நாட்டில் தப்பிப் பிழைக்க வேண்டுமெனின் தமிழனுக்குள்ள ஒரேயொரு வழி தமிழீழம் காண்பதுதான் என்பது அவருடைய முடிந்த முடிவாக விளங்கியது. ஆனால் தமிழீழம் என்பது நாம் கேட்க எந்த சிங்களஅரசும் வெள்ளித் தட்டில் வைத்துத் தருகின்ற பொருளாக அமையாது என்பதனையும் அவர் உணர்ந்தார். சலுகைகளை நாம் கெஞ்சிப் பெறமுடியும், உரிமைகளை நாம் கேட்டுப்பெறமுடியும். ஆனால் விடுதலையோ கெஞ்சியோ கேட்டோ பெறும்பொருளல்ல அதை நாமேநமக்குநிலைநாட்ட வேண்டும். ஆகவேதான் அவர் தனக்கே உரிய தனிநடையில் தமிழீழத்தைப் பெறுவதென்பது "வில்லங்கமான காரியம் தான்" ஆனால் தமிழினம் தப்பிப் பிழைக்கவேண்டுமெனின்

[7-ம் பக்கம் பார்க்க]

"மூதறிஞர் நினைவாக

# இன்று முழுதும் நாதஸ்வர இசை பொழியட்டும்"

### யாழ். மேயர் செய்தி

(யாழ்ப்பாணம்)

"தமிழ் ஈழத்தின் தேசபிதா அமரர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் 83வது பிறந்த தினத்தை தமிழ் ஈழம் மட்டுமல்லாது, தமிழ்க்கூறு நல்லுலகே ஒரு சேரக் கொண்டாடக் கடமைப்பட்டுள்ளது" என்று முதறிஞரின் பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ். மாநகர முதல்வர் திரு இராஜா விசுவநாதன் விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தமது செய்தியில் முதல்வர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

தனக்கென ஒரு சுதந்திரத் தாயகம் இல்லாது, "உலகின் கூலிகள்" என்ற பழிச்சொல்லுக்கும், வசைமாரிக்கும் இலக்காகியிருக்கும் தமிழ்க்குலத்துக்கு தனது என்ற பெருமைப்பட ஒரு சுதந்திரத் தாயகம் காணப் புறப்பட்ட தியாக சீலராக தந்தை செல்வா மிளிர்வதே அதற்குக் காரணமாகும்.

எனவே, அவரது கனவில் உதயமான உத்தேச தமிழ் ஈழ நாட்டின் பெருநகரமாகிய, யாழ். நகரின் முதல் மகன் என்ற கோதாவில் தேசத் தலைவனின் பிறந்த விழாவையொட்டிச் செய்தி விடுப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

"சத்தியம், நேர்மை, தியாகம் ஆகியவைகளுடன் போராடும் மக்கள் என்றும் அடிமைகளாக வாழமாட்டார்கள்" என்ற தந்தையின் உரையை இத்தினத்தில் நினைவுகூர்வதன்மூலம் தன்னம்பிக்கை பெறுவோமாக.

"அவரது 83 வது பிறந்த தினத்தில், அவரது இலட்சியக் கனவான, தமிழ் ஈழத்தை மீட்பது, புனரமைப்பது என்று சபதமெடுத்து, உறுதிபூணுவோமாக!

"சாதாரண பாமர மக்களுக்கும் தந்தையை நினைவூட்டும் வண்ணம், தந்தைக்குப் பிரியமான தமிழ் இசையாம் நாதஸ்வர இசையை இத்தினத்தில் நாள்பூராவும் ஒலி பரப்புமாறு பொதுத்தாபனங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

"இம் மாதம் பூராவும் தந்தையின் பெயரால் எடுக்கப்படும விழாக்களில் பெருந்தொகையினராகக் கலந்துகொண்டு தமிழ் ஈழத்தின் விரைவான விடுதலைக்கு வேகம் சேர்க்குமாறு தமிழ்பேசும் மக்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்புவாதத்தைக்கக்கி

# அரசியலை வளர்க்கும் கட்சிகளுக்கு எதிரானது மக்கள்விடுதலைமுன்னணி

## போபகே விளக்கம்

(யாழ்ப்பாணம்)

''வகுப்புவாதத்தைக்கக்கி அரசியலை வளர்க்கும் கட்சிகளுக்கு எதிராகவே மக்கள் விடுதலை முன்னணி தனது பணிகளைச் செய்துவருகிறது. அதனாலேயே இனவெறி மறுப்பு சங்க இயக்கத்தை நடத்தி மக்களுக்கு தெளிவான விளக்கத்தை அளித்து வருகின்றது

மக்கள் விடுதலை முன்னணி (ஜனதா விமுக்தி பெரமுன) அரசியல் குழு பிரசார உறுப்பினர் திரு. லயனல் போபகே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. போபகே மேலும் தெரிவித்ததாவது:

''மக்கள் விடுதலை முன்னணி சோஷலிச பிக்குகள் சங்கம் மலையக இளைஞர் பேரவை, மனித உரிமை இயக்கம் ஆகியன இணைந்து இன்றைய முதலாளித்துவ அரசுக்கெதிராகவும் நாட்டிலுள்ள பிறபிற்போக்குச் சக்திகளுக்கெதிராகவும் போராட முன்வந்துள்ளன.

இலங்கை அரசியலின் எதிர்காலநடைமுறையில் தேசிய ரீதியில் மூன்றுவது முனைப்பான சக்தியாகவும் இடதுசாரிகள் அணிதிரளத்தக்க பிரதான இயக்கமாகவும் மக்கள் விடுதலை முன்னணி விளங்குகின்றது.

மக்களுக்கு இன்றைய அரசாங்கம் பல இன்னல்களை உண்டுபண்ணியுள்ளது. ஐ. தே. க. வுக்கு எதிரான சக்தியாகவே மக்கள் விடுதலை முன்னணி விளங்குகின்றது. சகல முதலாளித்துவ சக்திகளதும் எதிர்ப்பு சக்தியாகவே இது விளங்கும்''

### தமிழ்மக்கள் பிரச்னையில் - தீர்க்கமான முடிவில்லை

மக்களை ஏமாற்றி ஆட்சி பீடமேறியது இன்றைய அரசு. பொருளாதாரம், வாழ்க்கை, கல்வி, சுகாதார, பிரச்சனைகளுக்கு இந்த அரசாங்கம் பூரண தீர்வை வழங்கவில்லை. விசேடமாகத் தமிழ் மக்களது தேசிய பிரச்னை விடயத்தில் இவ்வரசு தீக்கமான முடிவுகளை எடுக்கவில்லை''

''மக்கள்விரோத ஐ. தே. கட்சியை மக்கள் ஒதுக்க வேண்டும் அப்படியாயின் மக்கள் தலைமைக்கு ஆட்சியைக் கைப்பற்றுவது யாரென் பதிலேயே பிரச்னையுண்டு.

இடதுசாரிகள் கூட சுதந்திரக்கட்சி தலைமையிலேயே ஒன்றுசேர விரும்புகின்றனர் சுதந்திரக் கட்சியினர்கூட முதலாளித்துவத்தைப் பாதுகாப்பதற்கே முனைந்துவந்துள்ளனர்.

ஐ. தே. கவை விரட்ட ஸ்ரீ ல சு கவுடன் சேரவேண்டிய நிலையில் நாமில்லை. பதிலாக அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட சிங்கள தமிழ் முஸ்லிம் தொழிலாள, பாட்டாளி மக்களைத் தலைமைத் துவமாகக் கொண்டபேரணியைத்திரட்ட வேண்டும்.

தமிழ் மக்களது பிரச்னையைப் பொறுத்தும் மொழி ரீதியாகவும் இன்னும்அரசுக்கு தீர்க்கமான முடிவொன்றில்லை. (நா)

## உத்தியோகத்தர்கள் நியமனம்

(கொழும்பு)

பொது சுகாதார உத்தியோகத்தர்களை நியமிக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

விரைவில் நியமனம் பெறும் பொதுசுகாதார உத்தியோகத்தர்களுக்கு ஒன்றரை ஆண்டுகள் பயிற்சி அளிக்கப்படும் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது (இ)

ஈழகேசரி பொன்னையா நினைவு தினம் இன்று

## அமரர் பொன்னையா பற்றி அமரர் ஹன்டி

நண்பன் பொன்னையாவைட பற்றி எதை எழுத எதை விடுவது என்று முடிவு செய்வது எளிதல்ல வாலிபமகாநாடு, லாநிலையம் போன்ற நிறுவனங்களில் உழைத்த கலைப்புலவர் நவரத்தினம், வழக்கறிஞர் தி. தெ சுப்பையா, திரு. சி. சுப்பிரமணியம் (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி முன்னாள் அதிபர்) திரு. ஏ. ஈ. தம்பர், நான், (ஹன்டிபேரின்பநாயகம் ஆகிய யாவரும் அக்காலத்தில் ஓட்டாண்டிகள். எங்கள் உழைப்பு வாழ்க்கை நடாத்துவதற்கே போதாததாய் இருந்தது. பொதுத் தொண்டில் ஈடுபட்டு நாங்கள் அனைவரும் கடனாளிகளாக இருந்தோம். எங்களுக்கு வேண்டிய அச்சு வேலைகள், விளம்பரங்கள், வெளியீடுகள் தலைமை உரைகள் வேறும் சமயோசித அறுவல்கள் பெரும்பாலும் திருமகள் அழுத்தகத்திலேதான் செய்யப்பட்டன இவையாவும் கடனிலேதான். இந்தக் கடனை இறுக்கவேண்டியவடன் என்று நாங்கள் கருதவில்லை. அரைகுறையாக இக்கடனை இறுத்தது நினைட்பிலுண்டு.

ஒருமுறை திரு. பொன்னையா தனக்கேற்பட்ட நெருக்கடியால் என்னை நெருங்கிய போது இப்போது எவ்னிடம் காசு இல்லை நீர் கோட்டுக்குப் போய் அறவிடும் என்று அவருக்குச் சொன்னது இன்றும் என் நினைவில் இருக்கிறது. இந்தத் தலையிடியைத் தீர்ப்பதற்கு திரு. பொன்னையா அவர்களை வாலிபமகாநாட்டுக்குத் தனதிகாரியாக்கி விட்டோம். அவரையே கடன் கொடுக்க வேண்டியவராகவும் இறுக்க வேண்டியவராகவும், ஆக்கிவிட்டோம்.

திரு. பொன்னையா அவர்களது பொருளாதார நிலை சிறிது வளர்ச்சியடைந்தபோது, வேறுவழியில்லாவிட்டால் திரு. பொன்னையாவிடம் போவோம் என்ற தென்பு எங்களுக்கிருந்தது. அவருடைய மறைவு நாளில் நான் இதைக் கூறியபோது நண்பன் ச. நவரத்தினத்தின் கண்களிலிருந்து பொல பொல வென்று கண்ணீர் வழிந்தது. தான் ஈட்டிய பொருளை திரு. பொன்னையா அவர்கள் தனக்கே உரியதென்று எண்ணவில்லை. நல்ல நோக்கங்களில் அதைச் செலவிடுவதே தன்பொறுப்பு என அவர் எண்ணினார். சைவ விருத்தியா விருத்திச் சங்கம், வாலிபமகாநாடு, கலாநிலையம், குரும்பசிட்டி சன்மார்க்க சபை பல நிறுவனங்கள் அவரீட்டிய பொருளை அனுபவித்தன. இதை விட பள்ளிச் சம்பளம் கொடுக்க முடியாத பிள்ளைகள் பலருக்குத் தாராளமாக அவர் பண உதவி செய்தார். இப்படி அவர் வாரி வழங்குவதைக் கண்ட அவரின் நண்பர்கள் சிலர் சிறிது சிக்கனமாக வாழவேண்டுமென்று வற்புறுத்தியதுண்டு. அவர்களுக்கு அவர் எப்போதும் கூறிய மறுமொழி ''பணம் என்றும் இராது இருக்கும்போதே நல்ல காரியங்களுக்கு அதைச் செலவிடவேண்டும். இருக்கிற போதுகொடாதுபோனால் பிறகு எப்போது கொடுக்கலாம்''

புத்தக வியாபாரம் தொடங்கியபோது, ஈழகேசரியை வெளியிட ஆரம்பித்தபோதோ அல்லது அச்சகத்தை நிறுவியபோதோ திரு. பொன்னையா செல்வன் அல்ல, மூதல் வைத்துக்கொண்டு அவர் எம்முயற்சியிலும் இறங்கியதில்லை. ஏதோ ஒன்றைச் செய்யவேண்டுமென்று தீர்மானித்தால் வேண்டிய மூதல் இருக்கிறதென்றோ அல்லது என்னென்ன தடைகள் ஏற்படுமென்றோ சிந்திப்பது அவர் இயல்பல்ல.

''கேசரி என்ற ஆங்கில வார வெளியீட்டை வெளியிட அவர் கையாண்ட முறையை நினைக்கும் போதெல்லாம் எனக்குத்திகைப்பு ஏற்படுகிறது. ஈழகேசரியில் இடையிடையே எழுதியிருக்கிறேன். ஆறு ஆண்டுகள் சித்திரை வருடப்பிறப்போடு ஈழகேசரி ஆண்டுமலர்கள் வெளிவந்தன ஒவ்வொன்றிலும் நானும் ஏதோ எழுதியிருக்கிறேன். கேசரியில் கிழமைதோறும் ஆசிரியர் உரை எழுதியிருக்கிறேன். ஈழகேசரியின்மூலமோ கேசரியின் மூலமோ திரு. பொன்னையா பொருளீட்டவில்லை, இரண்டு பத்திரிகையாலும் அவருக்கு நட்டமே ஏட்பட்டது. சிறந்த நோக்கம் கொண்டே இவை தோற்றின? அந்நோக்கத்தையும் அவை நிறைவேற்றின. கேசரி மறைந்தது திரு. பொன்னையா மறைந்த சில ஆண்டுகளில் ஈழகேசரியும் மறைந்தது. இவை இரண்டும் வாலிபமகாநாட்டின் கொள்கைகளையே பரப்பின. விசேடமாக நாட்டின் விடுதலை நாட்டு மக்களின் ஒற்றுமை, தாய்மொழி மூலம் கல்வி, தீண்டாமை அகற்றல், தமிழ் வளர்ச்சி போன்ற குறிக்கோள்களையே இவ்விதழ்கள் கடைப்பிடித்தன. 'ஈழகேசரி' இத்துடன் இளம் எழுத்தாளர்களுக்குத் தம் திறமையைச் சாதிக்க வாய்ப்பளித்துச் சிறுகதைகள், தொடர்கதைகள், பாடல்கள், நாடகங்கள், கட்டுரைகள் போன்றவை வெளிவந்து இவ்வெழுத்தாளர்களுக்கு உளப்பூரிப்பை உண்டாக்கியதுடன் நாட்டின் அபிமானத்தையும் தேடிக்கொடுத்தன.

ஹன்டி எஸ். பேரின்பநாயகம்

## திருக்குறள் மாநாடு இம்முறை வேலணையில்

(வேலணை)

தமிழ்மறைக் கழகத்தின் 20வது திருக்குறள் மகாநாடு இவ்வருடம் வேலணையில் நடைபெறவிருக்கின்றது. வைகாசி மாதம் 29ம், 30ம், 31ம் திகதிகளில் மூன்று நாட்களுக்கு இவ்விழா நடைபெறும். இவ்விழாவில் சென்ற வருடங்களைப் போன்று மாணவரிடையே திருக்குறள் மனனப்போட்டிகளை நடத்துவதுடன் தமிழ் மறைக் கழகத் தலைவரும் ஊர்காவற்றுறை எம். பி.யுமான பண்டிதர் கா. பொ. இரத்தினம் எழுதிய திருக்குறள் கட்டுரைகளின் தொகுப்பு நூல் 'தமிழ்மறை விருந்து' என்ற பெயரில் வெளியிடப்படவிருக்கின்றது.

இம்மகாநாடு பற்றிய நடவடிக்கைகளைக் கவனிப்பதற்குக்குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டு அக்குழுவினர் சுறுசுறுப்பாக இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

விழாக்குழுத் தலைவராக திரு. வா. அருணகிரியும், செயலாளராக திரு. சி. மாணிக்கவாசகரும், பொருளாளராக திரு. சோ. கந்தையாவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

பண்டிதர் கா. பொ. இரத்தினத்தின் அலுவலகத்தில் கூடிய மேற்படி குழுவினர் விழாவினைச் சிறப்பாக நடாத்துவதற்குப் பல உபகுழுக்களை நியமித்துள்ளனர். தமிழ்நாட்டில் இருந்து பேச்சாளர்களை இம்மகாநாட்டிற்கு அழைப்பதெனவும் குழுதீர்மானித்துள்ளது. (கொ-அ)

## பொலிஸ்-மக்கள் நட்புறவுக் கழகம்

(வேலணை)

ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவில் பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையே நட்புறவை வளர்க்கும் நோக்கத்துடன் பொலிஸ் பொதுமக்கள் நல்லிணக்க சபையொன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திரு. கேரத் ஜயதிலகா தலைமையில் நடைபெற்ற இவ் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு எம் ஜே. சதியன் கலந்துகொண்டு பொலிசாருக்கும் பொதுமக்களுக்கும் இடையேயுள்ள தொடர்புகள், கடமைகள்பற்றி எடுத்துக் கூறினார்.

நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:-

தலைவர்; ப. பரஞ்சோதி, உபதலைவர்கள்: கே. சண்முகம், எஸ். வேதநாயகம், செயலாளர்: ஆர். எஸ். ஜேம்ஸ் சந்திரன், உபசெயலாளர்கள் செ. தவவிநாயகம் பிள்ளை, எஸ். நடராசா.

மற்றும் 80பேர்கள்கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (க)

## விசுவமடுவில் காணிவிசாரணை

(விசுவவடு)

விசுவமடுப்பகுதியில் அத்துமீறிக் குடியேறிய காணிகளின் பங்கீடுகள் பற்றிய விசாரணைகள் முல்லைத்தீவு மாவட்டக் காணி உத்தியோகஸ்தர் திரு.வேலுப்பிள்ளையினால் அடுத்தமாதம் 8ம் திகதி விசுவமடு குடியேற்ற அதிபரின் காரியாலயத்தில் நடத்தப்படவிருக்கிறது.விசாரணையின்பின் தகுதியானவர்களுக்குக் காணிகள் வழங்கப்படும்' [அ[

## விசுவமடு புதிய பிரிவு

[விசுவபடு[

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த விசுவமடு உடையார்கட்டு பகுதி விவசாயிகள் நலன் கருதிப் புதிய விவசாய விஸ்தரிப்புப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. ஒரு விவசாய போதனாசிரியரும் ஒரு வெளிக்கள உத்தயோகஸ்தரும் இங்கு கடமையாற்றுவார்கள் .புதிய விவசாய போதனாசிரியராக திரு.பாலசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

## வட்டுக்கோட்டை

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை கல்வி வட்டார பாடசாலைகளின்கலை விஞ்ஞான, தொழில்துறைப் பொருட்காட்சியும், கண்காட்சியும். நந்நாளை செய்வாய்க்கிழமையும் மறு நாள் புதன் கிழமையும் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வட்க்கோட்டை ஓம்.பி. திரு.தா.திருநாவுக்கரசு நாளை முற்பகல் இப் பொருட் காட்சியை திறந்து வைப்பார்.]இ)

## அதிமுக தலைமையில் அதிருப்தி — உழைப்பாளர் கட்சி ஆதரவை விலக்கியது

(சென்னை)

உழைப்பாளர் முன்னேற்றக் கட்சி எம். ஜீ. ஆரின் அ. தி. மு. க. வின் தலைமையில் தமது அதிருப்தியை தெரிவித்து அக்கட்சிக்கான ஆதரவை விளக்கியுள்ளது.

அ. தி. மு. க வின் தலைமை தான்தோன்றித்தனமாக நடக்கிறது. அத்துடன் அது நேசக் கட்சிகளுடன் ஒத்துழைப்பதே கிடையாது. இந்த நிலையில் அதற்கு இதுவரை அளித்து வந்த ஆதரவை விலக்கிக் கொள்வதைவிட வேறு வழியில்லை என்று அக்கட்சியின் தலைவர் மார்க்கபந்து தெரிவித்துள்ளார்.

### இந்திரா காங்கிரசில் சேர முயற்சி

இதே வேளை உழைப்பாளர் முன்னேற்றக் கட்சி இந்திரா காங்கிரஸ் கட்சியுடன் இணைய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இவ்விடயம் குறித்து பிரதமர் இந்திரா காந்தியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக மார்க்பந்து புதுடில்லி சென்றுள்ளார். (க)

## ஏப்ரல் 7 ல் திறக்கப்படும்

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் மூடப்பட்டி [illegible] மாதம் 7ம் திகதி திறக்கப் படவிருக்கிறது

## திருமலை மாஜி முதல்வர் காலமானார்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை முன்னாள் நகரசபைத் தலைவர் திரு. வெ. வெற்றிவேலு நேற்று காலமானார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தமிழர் கூட்டணி சார்பில் போட்டியிட்டுவெற்றியீட்டிய திரு. வெற்றிவேலு அண்மையில் தமது பதவியை ராஜினாமாச் செய்திருந்தார். (இ)

## பன்றித்தலைச்சியில் ''செல்வா'' பெயரால் வழிபாடு

(யாழ்ப்பாணம்)

மூன்றுவது பங்குனித் திங்களான இன்று பன்றித்தலைச்சி அம்மன் அலயத்தில் அமரர் செல்வாவின் பெயரில் முதலாவது பூசையும் -வழிபாடும் நடைபெறவுள்ளது?

மேற்படி நிகழ்ச்சிக்கான பணிகளை அறவழிப் போராட்டக் குழுவினர் மேற்கொண்டுள்ளனர். (கொ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மரம்நாட்டும் இயக்கம்

## இவ்வாண்டும் மர நடுகையில் ஈடுபடும்

[மாவிட்டபுரம்]

யாழ். மாவட்டத்தில் பரவலான முறையில் இவ்வாண்டும் மரம் நாட்டும் இயக்கத்தை மேற்கொள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் பயன்தரும் மரங்கள், நிழல்தருமரங்கள் ஆகியவற்றின் நாற்றுமேடைகள்போடப்பட்டு இவற்றின் கன்றுகள் தயார் செய்யப்படவுள்ளன.

யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பீ. விஜயக்கோன், அமைச்சின் செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி ஆகியோர் விடுத்தஉத்தரவினையடுத்தே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டும் யாழ். மாவட்டத்தில் மரம் நாட்டும் இயக்கம் பரவலானமுறையில் மேற்கொள்ளப் பட்டிருந்தது. இவ்வாண்டும் யாழ்.மாவட்ட சனத்தொகையான 8லட்சத்து 50 ஆயிரத்துக்குச் சமமாக அதேயளவு மரக்கன்றுகளை நாட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக ஒவ்வொருஉதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் நாற்று மேடைகளைப் போட்டு பயன்தருமரக்கன்றுகள், நிழல்தரு மரக்கன்றுகளைத் தயார் செய்யுமாறு உதவிஅரசாங்க அதிபர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மரம்நாட்டும் இயக்கத்தில் தேசியசேவை இளைஞர் மன்றமும் பெரும்பங்கை வகிக்கவிருக்கிறது, (அ)

## 'ஆசிரியர் வெளியேற்றத்தால் கல்வித்தரம் குறைகிறது"

(அரியாலை)

"மேலைத்தேய நாடுகளில் ஆசிரியர்களுக்கு இருக்கும் மதிப்பும், வேதனமும் இலங்கையில் கொடுக்கப்படாமையினல் சிறந்த ஆசிரியர்கள் நாட்டைவிட்டு நாளுக்கு நாள் வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். இதனல் நாட்டின் கல்வித்தரமும், மாணவர்களின் கல்வி விருத்தியும் குறைவடைகின்றது."

இவ்வாறு யாழ். பரி. யோவான் கல்லூரி மண்டபத்தில், நைஜீரியாவில் பதவி பெற்றுச் செல்லும் ஆசிரியர் திரு. ரி. தவராஜலிங்கத்திற்கு அளிக்கப்பட்ட பிரிவுபசாரத்திற்குத் தலைமைவகித்துப் பேசிய ஆசிரியர் குழுத் தலைவர் திரு. ஏ. எஸ். தர்மலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் "கடந்த இருபது வருடங்களாக பரி. யோவான் கல்லூரியில் பௌதிகவியல் ஆசிரியராகப் பணி புரிந்த திரு. தவராஜலிங்கம் மாணவர்களின் கல்வி விருத்திக்குத் .தமது பங்கைத் திறம்படச் செய்தவராவார். இவரிடம் பௌதிகவியல் பாடத்தைக் கற்ற மாணவர்கள் இன்று இலங்கையில் மிகவும் உயர்ந்த நிலையில் இருக்கின்றனர். காலத்துக்குக்காலம் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் அரசாங்கங்கள் ஆசிரியர்களின் அந்தஸ்தை உயர்த்துவதாகக் கூறிக் கொள்கின்றனவே தவிர அவர்களின் நிலைமையில் எவ்வித அபிவிருத்தியும் இதுவரை ஏற்படவில்லை. உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கப் பெருமையினல் சிறந்த ஆசிரியர்கள் இலங்கையை விட்டு வேறு நாடுகளில்வேலைவாய்ப்புகளைப் பெற்று நாளுக்குநாள் வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். இதனல் நாட்டின் கல்வித்தரம் குறைவடைந்து வருகிறது" என்றார்.

கல்லூரி அதிபர் திரு ஸீ. ஈ. ஆனந்தராஜன், உபஅதிபர் திரு. எஸ். பஞ்சலிங்கம் ஆகியோரும் பேசினர்.

ஆசிரியர்கள் குழுச்சார்பில் அவருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. (அ)

# மனநோயாளி நஞ்சுக்குப் பலி!

(யாழ்ப்பாணம்)

மனநோயாளி ஒருவர் கிருமிநாசினி அருந்தி மரணமான பரிதாபசம்பவம் ஒன்று நவாலி வடக்கில் நடைபெற்றது.

மரணமான பொன்னம்பலம் பூபாலசிங்கத்தின் (26 வயது) மரணவிசாரணை நவாலியில் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். அமிர்தலிங்கம் முன்னிலையில் நடைபெற்றது.

மரணவிசாரணையின் போது மரணமானவரின் தாயாரான திருமதி பொன்னம்பலம் பாக்கியம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"மரணமானவர் எனது மகன் அவர் கடந்த 3 வருடங்களாக மனநோயால் பாதிக்கப்பட்டிருந்தார். சம்பவதினம் காலை முடிவெட்டிவிட்டுவருவதாகக் கூறி வெளியே சென்றவர் சிறிது நேரத்தின்பின் வீடுதிரும்பினார். அப்போது அவருடைய கையில் ஒரு கிருமிநாசினிப் போத்தல் இருந்தது. முடிவெட்டாது போத்தலுடன் எனது மகன் வீட்டிற்கு வந்ததைக் கண்டதும் என்ன நடந்தது என்று விசாரித்தேன், அப்போது அவர் தனது கையில் இருந்தபோத்தலை எறிந்து விட்டு வாந்தி எடுத்தார். நான் அவரைத் தூக்கிய போது அவரின் வாயில் இருந்து கிருமிநாசினி மணம் வீசியது.

அயலவர்களின் உதவியுடன் அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லும் நோக்கத்துடன் அவரைக் கார் ஒன்றில் ஏற்றிய போது அவர் இறந்து விட்டார்".

மரணமானவரின் தந்தையான சுப்பையா பொன்னம்பலமும் சாட்சியமளித்தார்.

மரணவிசாரணையின் பின் தற்கொலை எனத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

ஆனைக்கோட்டைப் பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஜனுப் ஜபார் சாட்சிகளை ஆஜர் செய்தார். (கொ-இ)

## வகுப்பறைத் திறப்புவிழா

(பண்டத்தரிப்பு)

சாந்தை சிற்றம்பல வித்யாசாலையில் 25 ஆயிரம் ரூபா செலவில் நிறுவப்பட்ட வகுப்பறைக் கட்டிடத்தை அடுத்த மாதம் 2-ந் திகதி புதன் கிழமையன்று வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு திறந்து வைப்பார். வித்தியாலய அதிபர் திரு. இ. குமாரசாமி தலைமையில் நடைபெறவுள்ள இத்திறப்புவிழாவில் வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராஜா உட்படப் பலர் உரையாற்றுவார்கள். (அ)

## சமாதான நீதவான்



(மன்னார்)

மன்னார் பிரபல வர்த்தகர் திரு. தம்பிஐயா குமாரசாமி மன்னார் நீதி நிர்வாக மாவட்டத்துக்கான சமாதான நீதவானக நீதி அமைச்சரினல் நியமிக்கப்பட்டுள்ளார்.

வேலணையைச் சேர்ந்த திரு தம்பிஐயா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரான இவர், மன்னார் இந்து இளைஞர் பேரவைத் தலைவராகவும் மன்னார் வர்த்தகர் சங்கச் செயலாளராகவும் இருந்துவருகிறார். (இ)

......

## வட்டாரப் பொருட்காட்சி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கல்வி வட்டார கலை,கைப்பணிக்காட்சி செவ்வாய்க்கிழமையும் மறுநாள் புதன் கிழமையும் அச்சுவேலி புனித திரேச மகளிர் வித்தியாசயத்தில் நடைபெறுகிறது.

கோப்பாய் கல்வி வட்டாரத்தைச் சேர்ந்த 53 பாடசாலைகள் பங்கு பற்றும் இப்பொருட்காட்சியில் மேற்படி பாடசாலைகளின் கைவண்ணத்தில் உருவான ஒன்றிணைந்த பாட உபகரணங்கள் விஞ்ஞானம், கணிதம் ஆங்கிலம், சமூகக் கல்வி, கவின்கலை, என்பவை தொடர்பானகாட்சிப்பொருட்கள் காட்சிக்கு வைக்கப்படும்.

திறந்த வெளியரங்கில் நடனம். நாடகம், உடற்பயிற்சி ஆகியனவும் நடைபெறும். (கொ-இ)

......

## இறுதிப்போட்டி ஏப்ரல் 3ம் திகதி

(யாழ்ப்பாணம்)

பதின்மூன்று வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான இறுதிப்போட்டியில் சுன்னகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் பருத்தித்துறை ஹாட்லியும் மோதவுள்ளன.

இப்போட்டி ஏப்ரல் மாதம் 3-ம் திகதி மாலை கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்வித்திணைக்களத்தால் நடாத்தப்படும் 13 வயதுக்குட்பட்டோருக்கான இப்போட்டியில் அறுபத்தெட்டுப் பாடசாலைகள் பங்கு பற்றின. (கொ-அ)

......

## ரூ. 30 ஆயிரம் ஒதுக்கீடு

(அரியாலை)

பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழகத்திற்கென புதிய உதைபந்தாட்ட மைதானம் ஒன்றை அமைப்பதற்கு யாழ்ப்பாணத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரன் ரூபா முப்பதினயிரத்தை தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்துள்ளார்.

## இன்றைய கிரிக்கட்

(அரியாலை)

கொழும்பு இசிப்பத்தான மத்திய மகாவித்தியாலயத்திற்கும் யாழ். பரியோவான் கல்லூரிக்குமிடையிலான கிரிக்கட் போட்டி இன்றும் நாளையும் பரி. யோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (இ)

# லொறிவிபத்தில் சிக்கியவர் ஆஸ்பத்திரியில் மரணம்!

## சாரதிக்கு பிடிவிருந்து

(யாழ்ப்பாணம்)

லொறி விபத்தில் சிக்கி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தவர் மரணமானர்.

மரணமான சண்முகலிங்கம் மகாலிங்கத்தின் (30 வயது) மரணவிசாரணை யாழ். ஆஸ்பத்திரியில் மரண விசாரணை அதிகாரி திரு எஸ். எஸ். பிரான்சிஸ் முன்னிலையில்நடைபெற்றது.

மரணவிசாரணையின் போது இறந்தவர் கொக்குவிலைச் சேர்ந்த சிவல் தொழிலாளி என்றும் இவர் கிளிநொச்சியில் லொறி விபத்துக்குள்ளாகி அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்டு சிகிச்சை பெற்று வந்தாரென்றும் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணையின்போது கிளிநொச்சிப் பொலிசார் மரணவிசாரணைக்கு வராததையடுத்து தீர்ப்பு வழங்குவது ஏப்ரல் மாதம் 1ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

24 சிறி 6715 லொறியின் சாரதியைக் கைதுசெய்து கோர்ட்டில் ஆஜர் செய்யும் படி மரணவிசாரணை அதிகாரி பணித்துள்ளார். (கொ)

## கன்பொல்லையில் சிரமதானம்

(நெல்லியடி)

யாழ். மாவட்டத்தில் நவீன கிராமமாக மாற்றப்பட்டு வரும் கன்பொல்லைக்கிராமத்தில் தீண்டாமை வெகுஜன இயக்கமும் கனுவில் சனசமூக நிலையத்தினரும் சிரமதானப் பணியில் சுமார் 75 இளைஞர்கள் கலந்துகொண்டனர். மேற்படி சிரமதானத்தொண்டர்களின் பணிகளை, கன்பொல்லைக்கிராமமக்கள் பெரிதும் பாராட்டினர். [அ]

## திடீர் மரணம்

(மாவிட்டபுரம்)

விற்பனைத் திணைக்கள சிற்றூழியர் ஒருவர் லொறியில் பொருட்களை ஏற்றும்போது திடீரென மயக்கமுற்று மரணத்தைத் தழுவிக்கொண்ட சம்பவம் சுன்னகத்தில் இடம்பெற்றுள்ளது.

விற்பனைத் திணைக்களச் சிற்றூழியரான உத்துகொட என்னுமிடத்தைச் சேர்ந்த டபிள்யூ. எஸ். சிறிசேன என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

சுன்னகம் விற்பனைத் திணைக்களத்தில் கடமையிலீடுபட்டிருந்த இவர் லொறியில் பொருட்களை ஏற்றும்போது திடீரென மயக்கமுற்று தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானர்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா இம் மரணம் குறித்துவிசாரணை நடத்தியசமயம் காலமானவருக்கு இருதயநோய் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரேதபரிசோதனை நடத்திய தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி செல்வி நிர்மலா கனகரத்தினம் இருதயநோய் மட்டுமன்றி மண்டையிலும், முதுகிலும் கண்டல்காயங்கள் இருந்ததாகவும், மரணத்திற்கான காரணம் யாதுஎன்பதைக்கூற முடியாதிருப்பதாகவும் தெரிவித்தார்

இதனையடுத்து மரணவிசாரணை அதிகாரி இயற்கை மரணம் எனத் தீர்ப்பளித்து சடலத்தைச் தகனம் செய்யாது அடக்கம் செய்யுமாறு உத்தரவிட்டார்.

சுன்னகம் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர். (அ)

## மட்டுநகரில் செயலகக் கட்டிடம்

(மட்டுநகர்)

மட்டக்களப்பில் மத்திய செயலகம் ஒன்று 10லட்சம் ரூபாய் செலவில் அமைய உள்ளது. இந்த மத்திய செயலகத்தின் அவசியம் பற்றி மட்டுநகர் முதல்வழிம் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரை உளநாட்டு அலுவல்கள் அமைச்சர் கே. டபிள்யூ. தேவநாயகம் ஆகியோர் நீண்ட நாட்களாக வற்புறுத்தி வந்தனர். இடையில் இத்திட்டத்திற்குப் பணம் இவ்வருடம் ஒதுக்கப்படவில்லை.

ஆனல் தற்போது இச்செயலகம் இருமாடிக் கட்டிடமாய் அமைய உள்ளது. இக்கட்டிடம் ஏற்கெனவே திட்டமிட்டபடி கல்வி இலாகா வளவில் அமையலாமெனத் தெரிகிறது. [அ]

## 500 ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

டைனமைற் வெடிகளுக்குப் பாவிக்கும் கெற்புகளை வைத்திருந்ததாகப் பொலிசாரினல் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு ஐந்நூறு ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

வண்ணார்பண்ணை சிவன் கோவிலடியைச் சேர்ந்த திரு. த. பாலசுந்தரம் என்பவரிடம் இருந்து ஐயாயிரத்தி எழுநூறு கெற்புகளைக் கைப்பற்றிய யாழ். பொலிசார் மேற்படி சந்தேக நபரைக் கைது செய்து அவருக்கு எதிராக யாழ். நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

சந்தேக நபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டபோது சந்தேக நபர் கோர்ட்டிற்கு வராததால் சந்தேகநபருக்கு எதிராகப் பிடிவிருந்து பிறப்பிக்கப்பட்டது.

சந்தேகநபர் மீண்டும் கோட்டில் ஆஜராகிக் கெற்பு வைத்திருந்த குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து பதில் நீதிபதி திரு. எஸ். கனகரத்தினம் எதிரிக்கு அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (கொ)

## ஆஸ்பத்திரியில் குளிர்சாதனப்பெட்டி இல்லாமல்கஷ்டம்

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை சவச்சாலையில் குளிர்சாதனம் இல்லாமலிருப்பதால் சடலங்களைச் சில தினங்களுக்குக் கூட வைத்திருக்க முடியாமல் பெரிதும் கஷ்டம் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

தெல்லிப்பழை அரசினர் வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டு திடீர் மரணத்தைத் தழுவுபவர்களது மரணவிசாரணைகளை நடத்துவதற்குச் சிலசமயங்களில் தாமதம் ஏற்படுகிறது மாணமடைந்தவர்களது உறவினர்கள் தென்னிலங்கையிலிருந்தோ மலைநாட்டுப்பகுதியிலிருந்தோ வருவதாக இருந்தால் விசாரணையும் சிலதினங்கள் தாமதமாகின்றது.

ஆனல் சடலங்களை அவ்வாறு சில தினங்களுக்கு ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைப்பதற்கு முடியாமலிருக்கிறது. அங்கு குளிர்சாதனம் இல்லாமையே இதற்குக்காரணமாகும். (அ)

## செல்வா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளை தெரிவித்தார்.

பழம்பெரும் காந்தியவாதியான புதுடில்லி காந்தி சமாதான நிலையத்தைச் சேர்ந்த திரு ஆர் ஆர். திவாகர் கடந்த ஆண்டு செல்வா அறங்காவல் நினைவுச் சொற்பொழிவை நிகழ்த்தியது தெரிந்ததே. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க-ஈரான் பிரச்னை தீர

# கூட்டு ஆணைக்குழு அமைக்க அமெரிக்க அதிபர் விருப்பம்?

## தெஹ்ரான் செய்திக்கு வெள்ளை மாளிகை மறுப்பு

தெஹ்ரான், மார்ச் 30
அமெரிக்க-ஈரான் நெருக்கடிகளைத் தீர்க்கும் வகையில் கூட்டு ஆணைக்குழு ஒன்றை அமைக்க அமெரிக்க அதிபர் திரு ஜிம்மி கார்ட்டர் விருப்பம் தெரிவித்துள்ளாரென்று தெஹ்ரான் செய்திகள் தெரிவிக்கின்றன.

கூட்டு ஆணைக்குழு அமைப்பது குறித்து திரு கார்ட்டர் ஈரானிய சமயத்தலைவர் அயத்தொல்லா கொமெய்னிக்கு செய்தி அனுப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்க பணயக்கைதிகளை மாணவர்களிடமிருந்து ஈரானிய அரசு பொறுப்பேற்றபின்னர், இக்கூட்டு ஆணைக்குழுவை அமைக்கலாமென்று திரு. கார்ட்டர் தெரிவித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

அமெரிக்கா மறுப்பு

இதேவேளையில், கூட்டு ஆணைக்குழு அமைப்பதுகுறித்து திரு. கார்ட்டர் கொமெய்னிக்கு எதுவித செய்தியையும் அனுப்பவில்லையென்றும் இது வெறும் கட்டுக்கதையென்றும் வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. (இ)

## பஸ்-டிரக் விபத்தில் 10 பேர் பலி!

புதுடில்லி, மார்ச் 30
ராஜஸ்தான் மாநிலத்தில் நேற்று நடைபெற்ற பஸ்-டிரக் விபத்தில் 10 பேர் பலியாகினர் என்றும் அறிவிக்கப்பட்ட . (இ)

## எம். ஜி. ஆரின் போக்கில் திடீர் மாற்றம்

### சௌந்தரபாண்டியன் கூறுகிறார்

சென்னை, மார்ச் 30
முன்னாள் தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனின் போக்கில் இப்போது மாறுதல் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அண்மையில் அதிமுகவிலிருந்து வெளியேறிய முன்னாள் ஹரிஜனநல அமைச்சர் திரு பி. சௌந்தரபாண்டியன் தெரிவித்துள்ளார்.

# ஜனதாவைபிளவுபடுத்தும் பாவத்தை செய்யேன்

### ஜெகஜீவன்ராம் கூறுகிறார்

புதுடில்லி, மார்ச் 30
ஜனதாகட்சியைப் பிளவுபடுத்தும் பாவத்தைத் தாம் என்றும் செய்யப்போவதில்லை என்றும் இந்திய வரலாற்றில் 'பிரிவினை செய்பவர்கள்' என்ற பட்டத்தைத் பெறத் தாம் விரும்பவில்லை என்றும் திரு. ஜெகஜீவன்ராம் தெரிவித்துள்ளார்.

திரு. ஜெகஜீவன்ராம் தமது ஆதரவாளர்களுடன் நடத்திய முதலாவது நாள் மகாநாட்டில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

ஜனதா கட்சி பிளவுபடுமானால் அதற்குக் காரணம் ஜனசங்கே. ஜனதாவுக்குள் தோன்றியிருக்கும் நெருக்கடி தீர அக்கட்சியிலிருந்து 'ஜன சங்' வெளியேறுவது தான் ஒரே வழி என்றும் அவர் கூறினார்.

இந்திய காங்கிரஸ் பண் வாளர்களும்தொடர்ந்து பாடுபாட்டை மீண்டும் புதுப் படப் போவதாகவும் அவர் பிப்பதற்கு தாமும் தமதுஆதர கூறினர். (இ)



சினிமா நட்சத்திரம் லதா நடத்திய 'சாகுந்தலம்' நாட

[7-ம் பக்கம் பார்க்க]

## பாக். விரைவில் அணுசோதனை நடத்தும்

புதுடில்லி, மார்ச். 30
பாகிஸ்தான் இவ்வாண்டு இறுதியில் அல்லது அடுத்தாண்டு மூற்பகுதியில் அணுசோதனையை நடத்துமென்று இந்திய பாதுகாப்புத்துறை ஆய்வுநிலையம் தெரிவித்துள்ளது.

1971ம் ஆண்டு பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் ஜனாப் சுல்பிகார் அலிபூட்டோ அணுகுண்டு சோதனைகளை மேற்கொள்ளும் முயற்சியாக பிரான்சுடன் பேச்சுவார்த்தை நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

இந்தியாவின் ஆதரவுடன்

# பாலஸ்தீனவிடுதலைஇயக்கம் வெற்றி கிட்டும்வரை மேலும்முன்னேறும்

### யாஸிர் அரபாத் நன்றி

புதுடில்,லி மார்ச் 30
பாலஸ்தீன விடுதலை இயக்கம் தமது இலட்சியத்தில் வெற்றி கிட்டும்வரை இந்தியாவின் ஆதரவைக் கொண்டு மேலும் மேலும் முன்னேறிச் செல்லும்.

இவ்வாறு பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் ஜனாப் யாஸிர் அரபாத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டபோது பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமது இயக்கத்திற்கு இந்தியா தரும் ஆதரவுக்கு பாலஸ்தீன மக்கள் சார்பில் தாம் நன்றிதெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத் படைகள் வெளியேற வேண்டும் என்ற இந்தியாவின் நிலைக்குத் தாம் தமது ஆதரவைத் தெரிவிப்பதாகவும் அவர் கூறினார். (இ

## ரஷ்யாவில் அமெரிக்க தூதரக அதிகாரிகள் உளவு நடவடிக்கை

### சோவியத் பத்திரிகை குற்றச்சாட்டு

மாஸ்கோ, மார்ச் 30
சோவியத் யூனியனில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மாஸ்கோவில் உளவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக சோவியத் பத்திரிகை ஒன்று குற்றஞ்சாட்டியுள்ளது.

அமெரிக்கத்தூதரக அதிகாரிகள் உளவு பார்த்ததை நிரூபிக்கும் தஸ்தாவேஜுகள் கைப்பற்றப் பட்டுள்ளதாகவும் 'இஸ்வெஸ்தியா' என்ற அப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்கத் தூதரகத்தின் கோபுரத்தில் உளவுபார்ப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள 'ஏரியல்' போன்ற சாதனம் ஒன்றின் புகைப்படத்தையும் இப்பத்திரிகை பிரசுரித்துள்ளது'

1978 ம் ஆண்டு ஜூன்மாதமும் அமெரிக்கத் தூதரகம் ரஷ்யாவில் உளவு பார்த்ததெனக் குற்றஞ்சாட்டப்பட்டது தெரிந்ததே. (இ)

## பொதுநல அமைப்பில் பாக். மீண்டும் சேரும்

இஸ்லாமாபாத், மார்ச். 30
கடந்த எட்டுஆண்டுகளுக்கு முன் பொதுநல அமைப்பிலிருந்து வெளியேறிய பாகிஸ்தான் மீண்டும் அந்த அமைப்யில் சேர இப்போது விருப்பம் தெரிவித்துள்ளது.

இதற்கான முயற்சியில் பாகிஸ்தானின் நேசநாடுகளில் சில இப்போது முயன்றுவருகிறது என்று பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஷியாவுல் ஹக் தெரிவித்துள்ளார்.

1972ம் ஆண்டு பங்களாதேஷ் உருவாகியபோது அதனை பிரிட்டன் அங்கீகரித்ததையடுத்து பாகிஸ்தான் இந்த அமைப்பிலிருந்து வெளியேறியது. (இ)


விவசாயிகளே! இதோ வந்துவிட்டது!!

நீங்கள் எதிர்பார்த்த அற்புதமான, சிக்கனமான சக்தி வாய்ந்த சர்வபூச்சி நாசினி

பரத்தியன் 63



எல்லாப் பயிர்களையும் பாதிக்கும் எல்லாப் பூச்சி, புழுக்களையும் உடனே கட்டுப்படுத்துவதுடன் நீடியகாலம் தங்கும் தன்மையும் தரும்.

கிடைக்குமிடம்:
அக்ரேஸ் லிமிட்டெட்,
56, கந்தப்சேகரம் வீதி,
யாழ்ப்பாணம்.

ஏகவிநியோகஸ்தர்கள்:
ஜெகெம்
39, பிறிஸ்டல் பில்டிங், 51, யோக் வீதி,
கொழும்பு-1. தொலைபேசி: 24353


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன்—விஜயா
**ஜானகி சபதம்**

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
A.V.M. ராஜன்
**தெய்வம்**
(கலர்-புதிய பிரதி)

**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா
**ஒரு தாய் மக்கள்**
(புதிய பிரதி)


## வேம்பிராய்க் கிராமத்தில் ஆய்வு

(யாழ்ப்பாணம்)

இன்று திங்கள் காலை தொடக்கம் மாலைவரை அறவழிப் போராட்டக்குழுவினர் வேம்பிராய்க் கிராமத்தில் மக்களைச் சந்தித்து அவர்களின் சமூக பொருளாதாரப் பிரச்சனைகள்பற்றிய கிராம ஆய்வு ஒன்றினை நடத்தவுள்ளனர்.

இதன் மூலம் இருண்டு கிடக்கும் இக்கிராம மக்கள் எதிர்நோக்குகின்ற சகலபிரச்சனைகளை வெளியுலகுக்குத்யும் தெரியவைக்கும் அறவழிப் போராட்டக்குழு தொடர்ந்து ஈடுபடும்.

இப்பணியின்போது குழுவின் நடவடிக்கைக் குழு, தொகுதி இணைப்பாளர், அமைப்பாளர்கள் ஆகியோர் பங்குகொள்வர். [கொ-அ]

## இன்று

(யாழ்ப்பாணம்)

வடமாகாணஅரசாங்கஓய்வூதியர் சேமலாபச் சங்கத்தின் 6 வதுவருடாந்தக்கூட்டம்இன்று காலை யாழ்,நிம்மர் மண்டபத்தில் நடைபெறுகிறது. [இ]

கேதீச்சரத்தில்

## யோகசுவாமிகள் குருபூசை

[கொழும்புத்துறை]

கொழும்புத்துறை ஸ்ரீயோக சுவாமிகளின் குருபூசைவிழா நாளைமறுதினம் புதன்கிழமை காலை தொடக்கம் நண்பகல் வரை திருக்கேதீஸ்வரம் திருவருள் நிலையத்தில் நடைபெறவுள்ளது. (அ)

## றியூட்டரிமாணவி கமலத்தின் மரணவிசாரணை நாளை நீதவான் மகேசன் முன் 2 நாட்கள் நடக்கும்

(புலோலி)

பொலிகண்டி றியூட்டரி மாணவி செல்வி கமலம் இராமச்சந்திரனின் மரண விசாரணை மீண்டும் நாளையும் நாளை மறுதினமும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிபதி திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் நடைபெறும்.

மந்திகை அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை, கமலத்தின் தாயார் திருமதி இராமச்சந்திரன், சக மாணவிகளான செல்விகள் ஜெகமலர், உதயமாலினி ஆகியோர் செவ்வாய்க்கிழமை மறுநாள் யாழ். சட்டவைத்திய அதிகாரி டாக்டர் சரவணபவானந்தனும் சாட்சியமளிப்பார்கள் புதன்கிழமையே தீர்ப்பு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னர் பருத்தித்துறை நீதவானக இருந்த திரு. கே. ஞானச்சந்திரன் நடத்திய இம் மரணவிசாரணையை ஏப்ரல் 1ம் திகதி தொடர்ந்து நடத்துமாறு தற்போதைய நீதிபதி திரு. கே. எஸ். மகேசனுக்கு சட்டமாஅதிபர் உத்தரவு பிறப்பித்துள்ளார். (இ)

## மாற்று...

[3-ம் பக்கத்தொடர்ச்சி]

இதைவிட வேறுவழியில்லை என்றார். இந்த முடிவு எடுத்த எடுப்பில் எடுக்கப்பட்ட முடிவல்ல, வரலாற்று அடிப்படையிலும் வாழ்ந்த சூழ்நிலையினையும் நினைவுகொண்டு எடுக்கப்பட்ட முடிவு. ஆகவேதான் அவர் தனது சொற்களில் மேலும் சொன்னார், இது எம் முடிந்த முடிவு, மாற்ற முடியாத முடிவு என்றார். 1976-11-19ந் திகதியில் வெளிவந்த பாராளுமன்றப்பதிவேடு எம் நெஞ்சத்தில் ஆழப்பதியும் முறையில் அவரின் நிலையினை எடுத்துக்காட்டும் ஆவணமாக அமைகின்றது.

## தமிழினத்தின் அரசியல் மருத்துவர்

இன்று தமிழினத்திற்கு ஏற்பட்டுள்ள நோய் அரசியல் புற்றுநோயாக விளங்குகின்றது. இந்த நோயை மாற்ற தொடக்க நிலையில் நாம் பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்கள், ஒத்துழைப்புக்கள் போன்ற கலவை, குளிசை மருந்துகளைக் கையாண்டோம். அறப்போர் என்ற ஊசியையும் நாம் கையாண்டு பார்த்துவிட்டோம். ஆனல் தமிழினத்தின் இந்த நோய் முற்றிய புற்றுநோயாக விளங்குகின்றது. "நோய் நாடி நோயின் முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்" என்பது வள்ளுவர் கண்ட மருத்துவமுறை. இன்று நாம் நோயின் மூலகாரணத்தை உணர்ந்துள்ளோம். ஆளும் இனமாகச் சிங்கள இனமும், ஆளப்படும் இனமாதத் தமிழ் இனமும் இருக்கிற நிலையில் இந்த நோய் பல்வேறு வடிவம் எடுத்தே தீரும். இன்றையநிலையில் இந்நோயைத் தீர்க்க அறுவை மருத்துவ முறையைவிட வேறுவழி எமக்கு இல்லை. விளைவு மிகப்பாரதூரமானது. ஆனல் மீண்டும் தந்தையை நினைவு கொள்கின்றபோது தந்தை கூறிய சொற்கள் நினைவிற்கு வருகின்றன. "நாம் எதிர்க்காவிட்டால்அழிவோம், எதிர்த்தாலும் அழியக்கூடும், ஆனல் எதிர்த்தால் தப்பும் வாய்ப்புண்டு". இத்தாரக மந்திரத்தை நினைவு கொண்டு அறத்தின் வழியில் அறிவுக் கூர்மையோடு, அனைத்துலகையும் எம் பக்கம் ஈர்க்கும்முறையில் விடுதலைகாண விழைவோமாக. அனைத்துலக நாடுகள் மனிதநீதி என்ற அடிப்படையில்தான் தம்மை மருத்துவச்சிகளாக மாற்றி எம்நோவினைக் குறைக்கவும் நலமான குழந்தைப்பேற்றிற்கு-சுகப்பிரசவத்திற்கு துணை நிற்பார்களாக. "என் வாழ்நாளில் தமிழ் ஈழத்தைக்காண நான் விரும்புகிறேன்! அதை அடைய முடியாது போனல் அமிர்தலிங்கத்தின் காலத்திலாவது கிடைக்கும்" என்று அவர் பலதடவை கூறிய கூற்றுக்களை மெய்ப்பிக்கும் முறையில் அண்ணை அமிரின் காலத்தில் தமிழீழம்காண எம்மை அர்ப்பணிப்போமாக. இதுவே அவரின் பிறந்தநாளாகிய இன்று நாம் எடுக்கும் உறுதிமொழியாக அமையட்டும்.

கட்டைவேலி - நெல்லியடிச்சங்கம்

## ரூ. 4 லட்சம் புடவைகளை விநியோகிக்கும்

(நெல்லியடி)

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ சங்கம் தமிழ்—சிங்கள புதுவருடத்தினை முன்னிட்டு சுமார் 4 லட்சம் ரூபா பெறுமதியான புடவை வகைகளை விற்பனைக்காகக் கொள்வனவு செய்துள்ளது.

ப.நோ கூ.சங்கத்தின் கிளைகள் மூலமும் இரு புடவை நிலையங்கள் மூலமும் இரு விஷேட விற்பனை நிலையங்கள் மூலமும் இப்புடவை வகைகள் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட விருக்கிறது. (அ)

## "விளையாட்டுப்போட்டிகள் ஒழுங்கைப்போதிக்கின்றன"

(அச்சுவேலி)

"விளையாட்டுப் போட்டிகள் மூலமே மாணவர்கள் வெற்றியையும் தோல்வியையும் தாங்கிக்கொள்ளும் பயிற்சியினைப் பெறுகின்றார்கள். அத்துடன் ஒழுங்கு முறையும் மாணவருக்கு விளையாட்டிகள் போதிக்கின்றன" என்று யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களப் பிரதம கல்வி அதிகாரி ஜனப் எம். எம். மன்சூர், அச்சுவேலி மகாவித்தியாலய விளையாட்டுப்போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்துகையில் தெரிவித்திருந்தார்.

கோப்பாய் வட்டாரக்கல்வியதிகாரி திரு. ஏ. வி. தங்கராசா கொடியேற்றிவைத்து, விளையாட்டுப் போட்டிகளை ஆரம்பித்துவைத்தார். திரு எஸ். எஸ். துரைசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் ஜனப் மன்சூர் மேலும் பேசுகையில், விளையாட்டுப் போட்டிகள் மாணவருக்குச் சிறந்த பண்புகளை அளிப்பதனல் வட்டாரரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும் கல்வி இலாகா போட்டிகளை நடாத்திவருகின்றது. இப்போட்டிகள் போதாமையினல் கல்வி இலாகா புதிய திட்டமொன்றினையும் தயாரித்துள்ளது. வகுப்பு உடற்பயிற்சி நேரத்தில் ஒவ்வொரு மாணவனின் திறமைகளைப் பதிவுசெய்யப் பதிவுப் புத்தகமுறையினை அரசாங்கம் அறிமுகட்டடுத்தியுள்ளது. இதன்மூலம்அனைத்து மாணவர்களின் திறமைகளும் வெளிக்கொண்டுவரப்படச் சந்தர்ப்பம் அளிக்கப்படுகின்றது" என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கோப்பாய் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினர். இப்போட்டியில் 1ம் இடத்தினை செல்லையா இல்லமும், 2ம் இடத்தை சாண்டன் இல்லமும், 3ம் இடத்தினை பீனிஸ் இல்லமும் பெற்றன. (அ)

வடமராட்சி

## த. கா. கிளைகள் புனரமைப்பு

(உடுப்பிட்டி)

வடமராட்சிப் பகுதியில் உள்ள தமிழ்க்காங்கிரஸ் கட்சிக்கிளைகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இப்புனரமைப்பு வேலைகள் அடுத்தமாத நடுப்பகுதியில் ஆரம்பமாகவுள்ளதாகக் கட்சியின் வாலிப முன்னணிச்செயலாளர் திரு. ஆர். ஈ. ஆனந்தராசா தெரிவித்தார். [அ]

## எம்.ஜி.ஆர்....

(6ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தின்போது வசூலிக்கப்பட்ட பணத்தில் எதுவித மோசடியும் இடம்பெறவில்லை என்றும் திரு. சௌந்தரபாண்டியன் கூறினர். (இ)

## பி. பி. சி. யில் பரதக்கலை பற்றி பேட்டி

(லண்டன்)

புகழ் பெற்ற தென்னிந்திய பரத நாட்டிய மேதை திருமதி சித்திரா விஸ்வேஸ்வரனின் பேட்டி லண்டன் பி. பி. சி. தமிழோசை நிகழ்ச்சியில் ஏப்ரல் 12-ம் திகதி ஒலிபரப்பாகவிருக்கின்றது.

சென்னை நகரத்தில் 'சிதம்பரம்' எனும் நாட்டியப் பயிற்சி மன்றம் ஒன்றைத் தோற்றுவித்து, இளம் பெண்களுக்கு நாட்டியக் கலையைக் கற்றுக் கொடுத்து வருகிறார் இவர்.

அண்மையில் ஐரோப்பிய நாடுகளுக்கும் இலண்டனுக்கும் கலை விஜயம் செய்த இவரை, பி. பி. சி. தமிழோசைக்கென, தயாரிப்பாளர் சங்கர் பேட்டி கண்டார். நாட்டியக் கலை அனுபவங்கள், மேனட்டு ரசிகர்களின் ரஸனையுணர்வு, விமர்சகர்களின் பாங்கு ஆகியன பற்றி - இந்தப் 'பேட்டியில்' சித்ரா பல தகவல்களைத் தந்திருக்கிறார்.

## தமிழோசை

சனி - செவ்வாய் - வியாழன் தோறும் தமிழோசை ஒலிபரப்பாகிறது. இந்திய - இலங்கை நேரப்படி பிற்பகல்: 3. 00 முதல் 3. 30 வரை, 16 மீட்டர் அலைவரிசையிலும் மீண்டும் அதே இரவில்: 8-45 முதல் 9-45 வரையும், 9-45 முதல் 10-15 வரையும் 25, 49 ஆகிய சிற்றலை வரிசைகளில் இதனைக் கேட்கலாம்.


**ராஜா** (யாழ்ப்பாணம்)
99-வது நாள் தினசரி 4 காட்சிகள்
சிவாஜி விஜயா-சந்திரமோஹன் கவிதா நடித்த
**ஜெனரல் சக்கரவர்த்தி**
(ஈஸ்ட்மன் கலர்)

**SANTHI** JAFFNA — Phone: 7642.
Daily 09-45 a m, 2-30, 4-45, 7-00 & 9-30 p. m.
**"SPECIAL DELIVERY"** in color
More suited for Adults, and a first - class action film.
திகிலும், பரபரப்புமூட்டும் பிரமாண்ட வங்கிக் கொள்ளை! மெய்சிலிர்க்கச்செய்கின்றது. மற்றும் அமெரிக்க தலைநகரின் எழில்மிகு இயற்கைக் காட்சிகள் நிறைந்த சித்திரம்.
NB: Due to Power cut from 12 to 2 p.m. Morning show will start at 9-45 a.m.
மின்வெட்டுக் காரணமாக காலைக்காட்சி 9-45க்கு ஆரம்பமாகும்.

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மினி - லலிதா
**தூக்குத்தூக்கி**

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 4-45, 7-00 & 9-30
போன்: 7636
**Next Time I Will Kill You**

**மனோஹரா** A யாழ்ப்பாணம்
தினசரி 10-30 a.m., 4-45, 7-00, & 9-45 p.m.
**THE LAST OF VIKINGS**
(Cinemascope—Color)

3rd CROWDED WEEK
**REGAL** JAFFNA. Phone: 360
Daily 4 shous
at a m 8-00, 4-30, 7-00 & 9-30 p.m.
ROGER MOORE as JAMES BOND
**LIVE AND LET DIE**
(More suited for Adults)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி; 10-30, 2-30, 6-30, 9-30
சுதாகர்-ரதிகா
விஜயன்-ரதி
மற்றும்பலர் நடித்த
**நிறம் மாறுத பூக்கள்**
(வண்ணப்படம்)
திரைக்கதை-டைரக்ஷன்: பாரதிராஜா
இசையமைப்பு இளையராசா

**போயா தினத்தையொட்டி இன்றுசினிமாகாட்சிகளில்லை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dilka Watch Works
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும்
சிறந்த முறையில்
திருத்திக்கொள்ள...



டில்கா வாச் வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல்மாடி
204/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு The EELANAADU 50 சதம்

ஷார்ப் போட்டோ
கொப்பியிங் சேர்விஸ்
(COPYING SERVICE)

சகல விதமான, அச்சு மற்றும் கையெழுத்துப் பத்திரங்களை குறைந்த செலவில், குறுகிய நேரத்தில் இறக்குமதிசெய்யப்பட்ட காகிதத்தில் போட்டோ பிரதி செய்து கொடுக்கப்படும்.

SHARP PHOTO
10, கே. கே. எஸ். வீதி,
சுன்னுகம்.
(சுன்னுகம் மக்கள் வங்கி முன்பாக)

## வியட்னும் அதிபர் காலமானுர்

(ஹனேய்)

வியட்னும் ஜனுதிபதி டொங் டுக் டாங் காலமானுர் என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

91 வயதான வியட்னும் ஜனுபதி, மூதுபெரும் கம்யூனிஸ்ட் தலைவராவர். இவர் சிலமாதங்களாக சுகவீன முற்றிருந்தார்.

## கடலில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நீடிக்கும் பட்சத்தில் இன்று மாலை 5மணியுடன் அவர் 72 மணிநேரம் கடலில் மிதந்து சாதனையை நிலைநாட்டுவார்.

[நமது தெல்லியடி புலோலி நிருபர்கள் எழுதுவதாவது]

கடலில் கை கால்களைக் கட்டியவண்ணம் உலக சாதனையொன்றை நிலைநாட்டுவதற்காக வல்வெட்டித்துறையைச்சேர்ந்த துரைராசா யோகரத்தினம் 25 அடி ஆழமான கடலில் மிதந்த வண்ணம் சாதனை முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

திரு. யோகரத்தினத்தை தமிழர் விடுதலை கூட்டணித் தலைவர் திரு. சிவசிதம்பரம், எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், உடுப்பிட்டி எம். பி. திரு. த இராசலிங்கம் ஆகியோர் நேரில் சென்று பாராட்டியுள்ளனர்,

பாராளுமன்ற அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு வின்சன்ட் பெரேரா, உடுப்பிட்டி எம். பி. யின் வேண்டுகோளுக்கிணங்க, யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அத்தியட்சகரை மேற்படி சாதனை முயற்சியில் ஈடுபட்டுள்ள திரு. யோகரத்தினத்தின் தேவைகளைப் பூர்த்திசெய்யுமாறும், தமது பிரதிநிதியாக நேரிலே கலந்து கொள்ளுமாறும் பணித்துள்ளார்.

வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் எஸ். ஞானமூர்த்தி ஜனுதிபதிக்கும் பிரதமருக்கும் இச் சாதனைமுயற்சி பற்றி தந்திமூலம் அறிவித்துள்ளார்.

வடபகுதிக்குப் பொறுப்பான கடற்படைத் தளபதி ஜெனரல் விக்கிரமரட்ன திரு. யோகரத்தினத்தை நேரில் சென்று பாராட்டியுள்ளார்.

ஆழிக்குமரன் ஆனந்தன் திரு. யோகரத்தினத்தின் சாதனை முயற்சியை ஆரம்பித்துவைத்தார்.

இச் சாதனை முயற்சிக்கு இலங்கை நீச்சல்கழகத்தினர், பருத்தித்துறை லயன்கழகத்தினர், பருத்தித்துறை வை. எம். சி. ஏ. கழகத்தினர், மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பொது ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களும் நடுவர்களாக கடமையாற்றுகிறுர்கள்.

திரு. யோகரத்தினம் கடந்தவருடம் ஏப்ரல் மாதம் 18ம் திகதிமுதல் 20ம் திகதிவரை 52 மணிநேரம் கடலில் மிதந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது அவர் இம்முறை 75 மணி நேரம் கடலில் மிதந்தும் நீருக்குள் நடந்தும், யோகாசனம், செய்தும், சாதனையை நிலைநாட்டவுள்ளார்.

### ஆசியுரை

தமிழர் விடுதலை கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் தமது ஆசியுரையில் "செயற்கரிய செய்வர் பெரியோர் என்பதற்கிணங்க பிரமிக்கத்தக்க சாதனையை யோகரத்தினம் நிலைநாட்ட வேண்டும். பல வீரர்களைக் கண்ட இந்நகரம், ஊரும் உலகும் போற்றும் வண்ணம் இச்சாதனையை நிலைநாட்டி தமது பாரம் பரியத்தினைக் காப்பாற்ற வேண்டும்" என்றுர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் திரு. மு சிவசிதம்பரம் தமது ஆசியுரையில், "உலக சாதனைப்பட்டியலில் பல சாதனைகள் இடம் பெற்றிருந்தாலும் 25 அடி ஆழத்தில் மிதந்து சாதனையொன்று நிலைநாட்டப்படுவது இங்குதான் என்பது பாராட்டுதலுக்குரியது. பலமுறை சாதனைகளை நிலைநாட்டி சாகசங்கள் புரிந்த இந்நகர மக்களின் முயற்சிகள் நமது இனத்தின் எதிர் காலத்தின் சிறப்பை எடுத்து உணர்த்துகின்றது" என்றுர்.

உடுப்பிட்டி பாராளுமன்றப் பிரதிநிதி திரு. த. இராசலிங்கம் தமதுரையில் பிள்ளையின் சிறப்பில் தாய் அடையும் உவகைபோல யோகரத்தினத்தின் சாதனையின் சிறப்பை அனைத்து தாய்மார்களும் மகிழ்ச்சிகொள்வார்கள். யோகரத்தினத்தின் சாதனை உலகிலேயே தனித்துவமானதொரு சாதனையாக அமையும் என்பது உண்மை என்று தெரிவித்தார்.

## இன்று

[கோண்டாவில்]

கோண்டாவில் கிழக்கு இராமகிருஷ்ண வித்தியாலய புதிய கட்டிடத் திறப்புவிழா இன்று காலை நடைபெறுகிறது.

திரு. க. சொக்கலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் நல்லூர் எம்.பி. திரு. மு. சிவசிதம்பரம், நல்லூர் வட்டாரக் கல்விஅதிகாரி திரு. கு. சோமசுந்தரம் உட்பட பலர் உரையாற்றுவார்கள்.

திறப்புவிழாவின் தொடக்க நிகழ்ச்சியாக, கோண்டாவில் கிழக்கு நர்த்தன விநாயகர் ஆலயத்தில் விசேட பூசையும் அங்கிருந்து விநாயகர் பெருமானின் திருவுருவப்படத்தை ஊர்வலமாக எடுத்துவரலும் இடம்பெறும்.

ஃ ஃ ஃ

[வேலணை]

வலிகாமம் கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சனசமூக நிலையங்களின் ஒன்றிய சமாச அங்குரார்ப்பணக் கூட்டம் புத்தூர் கிராமசபை மண்டபத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கோப்பாய் எம்.பி. திரு. எஸ்.கதிரவேலுப்பிள்ளை, யாழ். வீடமைப்பு இலாகா அதிகாரி திரு. பி. இராமநாதன், யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் மேற்பார்வையாளர் திரு. வ. கிருஷ்ணசாமி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

## மணிக்கூட்டு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோபுரத்தில் பொருத்தப்பட்டிருந்த 2000 ரூத்தல் நிறையுடைய நான்கு மணிக்கூடுகளும் இறக்கப்பட்டுள்ளன. கோபுரம் புணரமைப்புச்செய்யப்பட்ட பின்னர், நான்கு மணிக்கூடுகளும் "எலக்ரோனிக்" செயல்பாடுகளுடன் பொருத்தப்படும்.

இவ்வேலைகள் இரண்டு மாதத்தில் முடிவடையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. (கெ]

## மகாவலி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"இந்த நாட்டில் வாழுகின்ற தமிழ் சிங்கள மக்களின் ஒற்றுமைக்கு மகாவலிநீர் ஒரு பாலமாக அமையும். அந்த நன்னுள் வெகுதூரத்தில் இல்லை.

"தமிழ் மக்களின் பண்பை சிங்கள மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர், நான் தென் இலங்கை வாழ் சிங்கள மக்களுக்கு தமிழ் மக்களின் பரந்த மனப்பான்மையை எடுத்துக் கூறியுள்ளேன். இனிமேலும் எடுத்துக்கூறத் தவறமாட்டேன்" என்றுர்.

யாழ். மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர் திரு. கே. கணேசலிங்கம் பேசுகையில் கூறியதாவது: "ஆசியாவிலேயே மிகப் பெரிய திட்டம், மகாவலித்திட்டமாகும். இலங்கை சரித்திரத்திலேயே இது போன்ற ஒரு பாரிய திட்டம் என்றுமே இருந்ததில்லை.

"தமிழன் வடக்கில் வாழ்ந்தாலென்ன, தெற்கில் வாழ்ந்தாலென்ன, அடிமையாக வாழாது சகல உரிமைகளும் பெற்ற சுதந்திர மனிதனுக வாழ வேண்டும். இந்த அரசு எமக்கு சகல துறைகளிலும் சமத்துவம் வழங்கியுள்ளது. வீடமைப்புத் திட்டங்கள் அமைக்கப்படும்போது தமிழ்ப் பகுதிகள் புறக்கணிக்கப்படவில்லை. இந்த நாட்டில் 20வீதமான தமிழ் மக்கள் வாழ்கிருர்கள். சிங்களத் தேர்ச்சி நிபந்தனை நிறுத்தப்பட்டுள்ளது

"மகாவலித்திட்டத்தின் ஒரு பகுதி மாதுறு ஓயாத் திட்டம் பூர்த்தியானதும், கிழக்கு மாகாணத்தில் உள்ள பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கவுள்ளது. அடுத்து மன்னூரிலுள்ள கட்டுக்கரைக் குடியேற்றத்திற்கு மகாவலி நீர்பாய்ச்சப்படும். அதனுல் வரண்ட பிரதேசமான மன்னூர் மாவட்டம் குளிர்ச்சி நிறைந்த மாவட்டமாகமாறவுள்ளது.

'மூன்ருவது திட்டத்தில் இரணைமடுக் குளத்திற்கு மகாவலி நீர்பாய்ச்சப்படும். அப்படிப்பட்ட பாரிய திட்டத்தில் சிங்களமக்களோடு தமிழ் மக்களும் சேர்ந்து சிரமதானப் பணிகளை மேற்கொள்வதால் நாமும் சிங்கள மக்களுக்கு சரிநிகர் அந்தஸ்துள்ளவர்கள் என்பதை நிலைநாட்டமுடியும்.

"தமிழ்ப்பகுதிகள் அபிவிருத்தி அடைய வேண்டுமானுல் தமிழ் எம்.பிக்கள் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அதற்கு இன்னும் காலம் கடந்துவிடவில்லை. தமிழ்ப்பிரதேசத்தின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டாவது அரசாங்கத்தோடு ஒன்றுசேர வேண்டும் என்று எம் பிக்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் எம் பிக்கள் சில சந்தர்ப்பங்களில் அரசைத் தூற்றினுலும், பல சந்தர்ப்பங்களில் பகிரங்கமாக அமைச்சர்களையும்அரசாங்கத்தையும் புகழ்ந்து கூறியுள்ளனர். அப்படிப்பட்டவர்கள் அரசாங்கத்தோடு ஒன்றுசேர்ந்து ஏன் தமிழ்ப்பகுதிகளை முன்னேற்றக் கூடாது" என்று கேட்டார்.

வடபிராந்திய பேக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. டட்லி குணசேகரா பேசுகையில் கூறியதாவது: "இலங்கை ஒரு விவசாய நாடு. மகாவலியை வரண்டபிரதேசத்திற்குத் திசை திருப்புவதன் மூலம் இப்பகுதியை முன்னேற்றுவதோடு மக்களுக்கு வேலைவாய்ப்பும் வழங்கமுடியும்

கடந்த அரசு 30 ஆண்டுகளில் மகாவலியைத் திசை திருப்பத் திட்டமிட்டிருந்தது. ஆனுல் இந்த அரசு 6 ஆண்டுகளில் மகாவலியைத் திசை திருப்பவுள்ளது. வடபகுதியில் இருந்தும் மக்கள் மகாவலித் திட்டத்தில் சிரமதானப் பணிகளை மேற்கொள்வதன்மூலம் இந்த நாட்டில் ஒரு தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த முடியும்" என்றுர். [கொ]

## யாழ். மாநகர...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லயத்தில் விசேட ஆராதனை நடைபெறும்.

### சாவகச்சேரியில்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரித் தொகுதியிலுள்ள சகல இந்து, கிறீஸ்தவ, முஸ்லிம் ஆலயங்களிலும் இன்று காலை அமரர் தந்தை செல்வாவின் நினைவாக பிரார்த்தனைகளும், வழிபாடுகளும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. ]கொ]

### வேலணையில்

[யாழ்ப்பாணம்]

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேலணைக்கிளை தந்தை செல்வா பிறந்தநாள் தொடர்பாக இன்று வேலணை முருகன் கோயிலில் பிரார்த்தனை, வழிபாடு நடத்தவுள்ளது. [வெ]

### நல்லூரில்

[யாழ்ப்பாணம்]

தந்தை செல்வா நினைவு தினக் கூட்டம் இன்று திங்கட்கிழமை மாலை நல்லூர்த் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணிக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டணித்தலைவர் திரு. . சிவசிதம்பரம் எம்.பி. தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், யாழ். மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன், திருவாளர்கள் சி. நாகராசா, வண்ணை. ஆனந்தன், பி. கனகசபாபதி ஆகியோர் உரையாற்றுவார்கள். [கொ-அ]

### மட்டக்களப்பில்

[மட்டக்களப்பு]

தந்தை செல்வாவின் நினைவு தினக்கூட்டம் இன்று மாலை மட்டக்களப்பு தமிழ் இளைஞர் பேரவையினரால் மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் கொண்டாடப்படுகிறது.

பேரவையின் அமைப்பாளர் திரு. இரா. வாசுதேவா தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் சுற்குடாத் தொகுதி அமைப்பாளர்திரு. சீ. சம்பந்தமூர்த்தி, பட்டிருப்பு பா. உ. திரு. பூ. கணேசலிங்கம், திரு. காசி ஆனந்தன் உட்பட பல பிரமுகர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள்.

மக்கினென் டிரவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்டெட்
உங்களை
திருச்சிராப்பள்ளி,மதுரை,பம்பாய்,கோலாலம்பூர்,சிங்கப்பூர்,பரிஸ்,லண்டன்,
துபாய், சவூதி அரேபியா, கனடா ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் செல்ல
மற்றும்
பாஸ்போட், அமெரிக்கன் டிறவலர்ஸ் செக், உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்,
சுற்றுலாக்கள் ஆகிய உங்கள் தேவைகளை
கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்துகொள்ள
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்.,
தபால் பெட்டி இல: 92
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154
பயணம் உங்களது! - சௌகரியமாக்குவது எங்களது!!

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்ஸ் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் மார்ச் மாதம் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post Office Sri Lanka under No. GP/6948/78.
The Eelanaadu, Post Box No. 49, Telegram: 'Eelanaadu' Phone: 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org